
★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 மார்ச் 9 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 60 | Saturday 09, March, 2024 | 11 பக்கங்கள் | 50/-

### வர்த்தக அமைச்சின் கீழ் இயங்கும்

## நுகர்வோர் விவகார அதிகாரசபை உறுப்பினர்கள் இராஜினாமா



நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் இராஜினாமா செய்துள்ளனர். சாந்த நிரியல்ல உட்பட 15 பேர் கொண்ட பணிப்பாளர் சபையினர் இராஜினாமா செய்துள்ளதாக வர்த்தக அமைச்சர் 06

### வெளிநாட்டு பணியாளர்களால்

## ஜனவரியில் ரூ. 14,880 கோடி இலங்கைக்கு அனுப்பிவைப்பு

### நாட்டின் நிதி வலுவூட்டலுக்கு பெரும் பங்களிப்பு

இலங்கையின் பொருளாதார மற்றும் நிதி வலுவூட்டலுக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் வெளிநாட்டு வேலைவாயப்புக்காக சென்றுள்ள இலங்கையர், கடந்த ஜனவரி மாதம் 14,880 கோடி ரூபாவை (488 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) இலங்கைக்கு அனுப்பியுள்ளனர். 06




# IMF பிரதிநிதிகளுடன் கலந்துரையாட எதிர்க்கட்சி தலைவர்களுக்கு வாய்ப்பு

### சஜித், அநுரகுமார, ஸ்ரீதரன், ஹர்ஷவுக்கு ஜனாதிபதி அழைப்பு

### எதிர்வரும் திங்கட்கிழமை (11) ஜனாதிபதி அலுவலகத்தில் IMF உடனான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

IMF உடனான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்ல அனைத்து கட்சிகளினதும் கூட்டுப்பொறுப்பு அவசியமானது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு, IMF பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். எதிர்வரும் திங்கட்கிழமை (11) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் கலந்துகொள்ள விரும்பும் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்குமாறு பாராளுமன்றத்தின் நிதிக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு ஜனாதிபதி 06

### கனடா தலைநகர் ஒட்டாவாவில்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இலங்கையர் 06 பேர் கொலை



### 07 வயதுக்குட்பட்ட 04 குழந்தைகளும் தாயும் படுகொலை

### தலையில் பலத்த காயங்களுடன் தந்தை பொலிஸாரால் மீட்பு

### வீட்டில் குடியிருந்த 19 வயது இலங்கை இளைஞர் கைது

கனடாவில் வசிக்கும் இலங்கை குடும்பத்தைச் சேர்ந்த 06 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கனடாவில் வசிக்கும் 19 வயதுடைய இலங்கை மாணவர் ஒருவர் கனேடிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், நான்கு பிள்ளைகள் மற்றும் அவர்களது வீட்டில் வசித்த 40 வயதுடைய மற்றொரு நபரே இவ்வாறு கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதாக ஒட்டாவா பொலிஸ் அதிகாரி எரிக் ஸ்டப்ஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையிலிருந்து கனடா சென்ற குடும்பத்தினரே இவ்வாறு 06

### சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வு 2024



2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வு 'அவளுக்கான பலம் நாட்டுக்கான முன்னேற்றம்' என்ற தொனிப்பொருளின் கீழ் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் பெருமையுடன் நேற்று (08) நடைபெற்றதுடன், நாடளாவிய ரீதியில் இருந்து பெண்கள் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவான பெண்கள் இதில் கலந்துகொண்டனர். 06

### உலக வங்கியின் பட்டியலில் 02 பேர்

## தெற்காசியாவில் தடைகள் தாண்டி சாதித்த இலங்கை பெண் ஆளுமைகள்

தெற்காசியாவில் தடைகளை தாண்டி சாதித்து, ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாக திகழும் பெண் ஆளுமைகள் தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள பட்டியலில் இலங்கை பெண்கள் இருவர் இடம்பிடித்துள்ளனர்.

'விழுது' சிவில் சமூக அமைப்புக்கு தலைமை தாங்கும் மைத்ரேயி இராஜசிங்கம் மற்றும் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி வில்சன் ஆகியோரே பெண் ஆளுமைகள் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். 11 பேரைக் கொண்ட உலக வங்கியின் பட்டியலில் இடம்பிடித்துள்ள அவர்கள் இருவரும் 06

## பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிப்பு

இந்தியாவின் பிரபல பின்னணி பாடகி பி.சுசீலா டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திருப்பதி ஸ்ரீ பத்மாவதி மகளிர் பல்கலைக் கழகத்தில் 21ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவிலேயே 06



### 'ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில் திட்டம்'

## நிதி நெருக்கடி நிலையிலுள்ள ஒரு இலட்சம் மாணவருக்கு பெரும் உதவியாக அமையும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய 2024/2025 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட 'ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில்' திட்டம் பொருளாதார நெருக்கடியிலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பெரும் உறுதுணையாக இருக்குமென கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார். எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கல்விச் சீர்திருத்தங்களை இலக்காகக் கொண்டு புதிதாக 20 வலயக் கல்வி அலுவலங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் 06

### வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்திய

## மக்களின் காணிகளை விடுவிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

வடமாகாணத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீள விடுவிக்குமாறு அமைச்சர் பவித்ராதேவி வன்னி ஆராச்சியிடம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அரச மரக்கூட்டுதாபனத்தில் அமைச்சரை நேரடியாக சந்தித்து ஆளுநரால் இந்த 06





## 03

### முன்னணி வர்த்தக தூதுக்குழுவுடன் இணைந்து

## தாய்லாந்தின் முன்னாள் பிரதி பிரதமர் பிரதமர் தினேஷூடன் சந்திப்பு



## 03

## மூன்று மீனவர்களுடன் மீன்பிடிப் படகு மாயம்

### கற்பிட்டி பொலிஸில் முறைப்பாடு

### சிவராத்திரி பூஜை ஏற்பாடு


## வெடுக்குநாறி ஆலய பூசகர் உட்பட இரண்டு பேர் கைது



வவுனியா வெடுக்குநாறி ஆலய பூசகர் உட்பட இருவர் நேற்று முன்தினம் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மகா சிவராத்திரி பூஜைக்கான ஒழுங்கமைப்பில் ஈடுபட்டிருந்த போதே, இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெடுக்குநாறி ஆலய பூசகர் மற்றும் நிர்வாக 06

## நானுஓயா ரதல்ல வீதியில் விபத்து; இருவர் காயம்




நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில், நுவரெலியா பிரதேச சபைக்கு முன்பாக (07) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நானுஓயா ரதல்லவிலிருந்து நுவரெலியா 06

### நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில்

## ஜனாதிபதி ரணிலை ஆதரிக்க தீர்மானம்

### ஐக்கிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

இந்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தமது கட்சி தீர்மானித்துள்ளதாக, 06



### ஒரு கோடி ரூபா பெறுமதியான

## வலம்புரிச் சங்குடன் தேரர் உட்பட இருவர் கைது



மட்டக்களப்பு, கல்குடா பிரதேசத்தில் ஒரு கோடி ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்குடன் பௌத்த தேரர் உட்பட இருவர் நேற்று முன்தினம் (07) விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சந்தேகநபர்களால் இந்த வலம்புரிச் சங்கு, மாத்தறையிலிருந்து மட்டக்களப்புக்கு கடத்திக் கொண்டு செல்லப்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளதாக, கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சந்தேகநபர்களிடம் கல்குடா பொலிஸாரால் விசாரணை நடத்தப்பட்டு வரப்படுகின்றது.

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தங்கமுலாம் பூசிய வாளுடன் கைது



தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிவாளை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் தென்மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பை சேர்ந்த ஒருவர், திஸ்ஸமஹாராமவை சேர்ந்த ஒருவரிடம் தங்கமுலாம் பூசப்பட்ட இந்த வெள்ளிவாளை 06


### வளைகுடா கடலில் தாக்கப்பட்ட

## வணிகக் கப்பலிலிருந்த 02 இலங்கையரும் மீட்பு

ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளான வர்த்தகக் கப்பலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

True Confidence என்று பெயரிடப்பட்ட இச்சரக்குக் கப்பல், ஏமனின் ஈடன் துறைமுகத்திலிருந்து 50 கடல் மைல் தொலைவில் வளைகுடா கடலில் ஏவுகணை தாக்குதலுக்குள்ளாகியது. உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி, மூன்று பணியாளர்கள் (இரண்டு பிலிப்பைன்ஸ் மற்றும் ஒரு வியட்நாம்) கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் இரண்டு இலங்கை பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த இலங்கையர் உட்பட உயிரிழந்தவர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் 06

## கொழும்பு நகரில் காற்று மிக மோசமாக மாசடைவு



கொழும்பு நகரில் காற்று மிகவும் மோசமாக மாசடைந்து வருவதாக, வானிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். கொழும்பு நகரில் காற்றின் 06

# கேலிச் சித்திரங்கள் ஜனநாயகத்தின் ஓர் அங்கம் "Press Vs. Prez" நூல் வெளியீடு விழாவில் ஜனாதிபதி











ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வகிபாகத்தை இந்நாட்டு கேலிச்சித்திரக் கலைஞர்கள் சித்தரித்த விதத்தை பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்தன "Press Vs. Prez" என்ற நூலாக வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் (07) கொழும்பு நெலும் பொக்குண கலையரங்கத்தில் இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 9 ஆவது பாராளுமன்ற உறுப்பினராக 2021 ஜூன் 23 ஆம் திகதி பதவியேற்றதிலிருந்து, மே 2023 வரையிலான அவரது பயணம் குறித்து, நாளிதழ்களில் வெளியான 618 கேலிச்சித்திரங்கள் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.

இந்நூலின் முதல் பிரதியை பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்தன ஜனாதிபதிக்கு வழங்கிவைத்தார்.

அத்துடன் 40 கேலிச்சித்திர கலைஞர்கள் மற்றும் 20 ஊடகவியலாளர்கள் இப்படைப்புக்கு பங்களிப்புச் செய்துள்ளனர்.அவற்றை தொலைக்காட்சி ஊடாக வெளியிட்ட கலைஞர்களுக்கு ஜனாதிபதி இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் இந்திய புகழ்பெற்ற கேலிச்சித்திர கலைஞர் நளபொன்னப்பா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் ரொஹான் நெட்டசிங்கவால் நூல் பற்றிய விமர்சன விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

கேலிச்சித்திரங்களின் தொகுப்பு ஒரு பாரம்பரிய பணியை நிறைவேற்றியுள்ளது. ஜே.ஆர் ஜயவர்த்தன, சேர் ஜோன் கொத்தலாவல ஆகியோரின் வீடுகளில் இவ்வாறான தொகுப்புக்களைக் கண்டிருக்கிறேன். அதனால் இன்று வஜீரவும் அவ்வாறான சம்பிரதாய பூர்வமான பணியை நிறைவேற்றியுள்ளார்.

இத்தொகுப்பில் குறிப்பிடப்படும் 2021 2023 கால கட்டத்தை இப்போது நாம் மறந்துவிட்டோம். நான் பதில் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட தருணத்தில் சித்தரிக்கப்பட்ட காட்சி இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்ததைக் கவனித்தேன். அந்த நேரத்தில் சத்தியப்பிரமாணம் செய்ய இடமிருக்கவில்லை. அரச அலுவலகங்களில் செய்தால் அதற்கு தீ மூட்டிவிடுவார்கள் என்ற அச்சம் காணப்பட்டது.

பின்னர் பிரதம நீதியரசருக்கு அறிவிக்கப்பட்டு வாலுக்காராமய விகாரையில் வைத்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டேன். அப்போது நாட்டின் நிலைமை அவ்வாறானதாக இருந்தது. வன்முறைக் கும்பல் பாராளுமன்றத்தை சுற்றிவளைக்க முற்பட்டது.

இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அதனைத் தடுத்து நிறுத்த முடிந்தது.

மேலும், நாட்டில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இந்த நேரத்தில் மாத்திரம் 2000 கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. நாம் ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தியிருந்தால் அத்தகைய படைப்புகள் பிறந்திருக்காது. இவ்வாறான படைப்புக்கள் ஜனநாயகத்தின் ஒரு அங்கமாகும். அவதூறு சட்டத்திலிருந்து விடுபட முடிந்ததில் பெருமை கொள்கிறேன்.

இன்று புத்தகங்கள் எழுதலாம். தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம் என எந்த வகையிலும் படைப்புக்களை உருவாக்கலாம். அந்த சுதந்திரம் இருக்கிறது. 1931 இல் இந்த நாட்டில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இந்த நாட்டில் ஜனநாயக முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகளைத் தடை செய்யவில்லை. எதிர்க்கட்சி தலைவர்கள் சிறையில் அடைக்கப்படவில்லை. பிரச்சினைகள் இருந்தன.

ஆனால் ஒரு தேர்தலுக்குப் பிறகு முடிவுகளை ஏற்று அதற்கேற்ப தோல்வியை ஏற்றுக்கொண்டு ஆட்சியை விட்டு வெளியேறினர். ஆசியாவிலேயே இப்படி நடந்த ஒரே நாடு இலங்கை தான். நம்மிடையே எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் ஜனநாயகத்தை மதிக்கிறோம்.

இந்த கார்ட்டூன்கள் அனைத்தும் நாட்டிலுள்ள சுதந்திரத்தைக் காட்டுகின்றன. இவ்வருட இறுதியில் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறும் போதும் இவ்வாறான கேலிச்சித்திரங்கள் குறையப்போவதில்லை. மாறாக அவை அதிகரிக்கும். இந்த ஜனநாயக சுதந்திரத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நான் மிகவும் கடினமான நேரத்தில் நாட்டைக் பொறுப்பேற்றுக் கொண்டேன். நாட்டின் அரசியல் சரிவடைந்து கிடந்தது. ஆனால், எம்மால் பொருளாதாரத்தை நல்ல நிலைமைக்கு கொண்டு வர முடிந்தது. பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட்டோம். அந்த ஜனநாயகத்தையே இந்த சித்திரங்கள் பிரதிபலிக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில் நாம் சிரமப்பட்டு முன்னெடுத்த வேலைத்திட்டத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை சாதகமான நிலைக்கு கொண்டு வர முடிந்தது. நாம் எதிர்கொள்ளும் கடினமான காலத்தின் கடைசிப் பகுதி இதுவாகும். இன்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினேன். நாங்கள் இதுவரை செய்த அனைத்து செயற்பாடுகளும் வெற்றியளித்துள்ளதாக குறிப்பிட்டனர். எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் குழுவின் தீர்மானங்களுக்கமைய, தனியார் கடன் வழங்குநர்களும் அவர்களின் கருத்துக்களை தெரிவிக்கவுள்ளனர். நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமான பிரதிபலனைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தின் கடன் தொடர்பான கலந்துரையாடல்களில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை ஈடுபடுத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார். அதன்படி, அந்த யோசனைகள் அனைத்தையும் சர்வதேச நாணய நிதியத்துடன் விவாதித்து அவர்களின் இறுதி முடிவின்படி செயல்பட எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்துரையாட முடியும். எனவே, அனைவரும் இணைந்து இந்தப்பயணத்தை மேற்கொள்ள முடியும் என நம்புகிறேன்.

இந்த இக்கட்டான காலங்களில் இந்த கேலிச்சித்திரங்கள் எமக்கு நிவாரணமாக அமைந்தன. அதனால் வாழ்க்கையை எளிதாகப் பார்க்க முடிந்தது.

இப்போது நாம் அனைவரும் நிலையான எதிர்காலத்தை நோக்கி செல்ல வேண்டும். எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைப்பதன் அந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும் என நான் நம்புகிறேன். அதேபோல் கேலிச்சித்திரக் கலைஞர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்." எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிநாட்டுத் தூதுவர்கள், ஊடகவியலாளர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய நண்பர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.











தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 9 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

சுபஹ் - 05.06
ளுஹர் - 12.23
அஸர் - 03.41
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் மாசி 26

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



முன்னணி வர்த்தக தூதுக்குழுவுடன் இணைந்து

# தாய்லாந்தின் முன்னாள் பிரதி பிரதமர் பிரதமர் தினேஷுடன் சந்திப்பு

இலங்கை வந்துள்ள தாய்லாந்தின் முன்னாள் பிரதி பிரதமர் கொம் டபரன்சி, பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேற்று முன்தினம் (07) அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தாய்லாந்து வர்த்தகத் தூதுக் குழுவொன்றுடன் இணைந்தே தாய்லாந்தின் முன்னாள் பிரதி பிரதமர் கொம் டபரன்சி, பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.

விவசாயம், சுற்றுலா உள்ளிட்ட பல துறைகளில் சாத்தியமான முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாக இதன்போது அவர்கள் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த தூதுக் குழுவில் வர்த்தகர்களான அட்டகோர்ன் மேன்சமுட், சாம்ரஸ் விஸ்வச்சாய்பன், ஏ.கே.ஏ.அஃப்ரீல் மற்றும் எல்.எம்.ஃபுர்ஹான் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க மற்றும் ஆலோசகர் சுகீஸ்வர சேனாதீர ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தவக்கால சிந்தனை



## தாழ்ச்சியின் வரைவிலக்கணம்

பரிசேயர் வரிதண்டுபவர் ஆகிய இருவர் ஆலயத்திற்கு வழிபடச் சென்றார்கள் என்பது இன்றைய நற்செய்தியாகும்.

இயேசுவின் காலத்தில் பரிசேயர்கள் நேர்மைத்தனம் நிறைந்தவர்களாகவும், வரிதண்டுபவர்கள் பாவிகளாகவும் கருதப்பட்டனர். ஆனால் இயேசு நற்செய்தியில் அந்நிலையை அப்படியே மாற்றி அமைக்கின்றார். அது அவரது மக்களுக்கு அதிர்ச்சியூட்டும் செய்தியாகவே இருந்திருக்கும்.

இருவருடைய இறைவேண்டலை எடுத்து நோக்குகின்ற போது, பரிசேயர் கடவுளிடம் வேண்டுவதற்கு பதிலாக தன்னிடமே வேண்டுகிறார். தன்னை உயர்த்தியும் அடுத்தவர்களை தாழ்த்தியும் வேண்டுகிறார். ஆனால் மறுபக்கம், வரிதண்டுபவர் தனது கண்களையும் மேல் நோக்கி ஏறெடுத்துப் பார்க்காமல்,'கடவுளே, பாவி என் மீது இரங்கும்' என்று வேண்டுகிறார்.

நாம் எதற்காக இறைவனிடம் வேண்டுகிறோமோ அதனையே பெற்றுக்கொள்வோம். இங்கு பரிசேயர் எதற்காகவும் வேண்டவில்லை அதனால் எதனையும் பெறவில்லை. ஆனால், வரிதண்டுபவர் இறைவனின் இரக்கத்திற்காக, மன்னிப்புக்காக வேண்டினார். அதனை அவர் பெற்றுக்கொண்டார்.

இன்றைய நற்செய்தியில் வருகின்ற மாற்றமானது இயேசுவின் காலத்தில் அவரை பின்பற்றியவர்களில் ஏற்படுத்திய அதிர்ச்சியை போன்று பெரியளவில் தாக்கத்தை நம்மில் ஏற்படுத்தா விட்டாலும், இந்நற்செய்தியானது நாம் யாரை போன்று இருக்கின்றோம் என்று சிந்திக்க, தியானிக்க அழைப்பு விடுக்கிறது. நம்மை நாமே உண்மையாக புடமிட வரிதண்டுபவர் நமக்கு கற்றுத் தருகிறார்.

நம்மை நாமே உயர்வாகவோ அல்லது தாழ்த்தியோ மதிப்பீடு செய்யாது, உள்ளதை உள்ளபடியே மதிப்பீடு செய்ய வேண்டும். இதுவே தாழ்ச்சியின் உண்மையான வரைவிலக்கணமாகும். உண்மையாகவே இயேசு நம் வாழ்வின் மீட்பர் என்று நாம் நம்பினால், வரிதண்டுபவரை போன்று அவரையே நாம் உதவிக்கு கூவி அழைப்போம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

கிழக்கு ஆளுநர் செந்திலின் அழைப்பில்

# கோணேஸ்வரர் ஆலய சிவராத்திரியில் மகாதேவ தேசிக சுவாமிகள் பங்கேற்பு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி விரத நிகழ்வில் மகாதேவ தேசிக சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்து கொண்டார். இங்கு மகாதேவ தேசிக சுவாமிகளின் தெய்வீக சொற்பொழிவும் நடைபெற்றது.

கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் கடந்த 02ஆம் திகதி முதல் சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் தொடர்சியாக தினமும் மாலையில் நடைபெற்று வந்தன.



ஹரக் கட்டாவுக்கு உதவிய குற்றச்சாட்டு;

# கைதான பொலிஸ் சார்ஜண்ட் சேவையிலிருந்து இடைநிறுத்தம்



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவுக்கு உதவியதாகக் கூறப்படும் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் பயங்கரவாத விசாரணை பிரிவால் கைது செய்யப்பட்டபின்னர் பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர் என்றும் அவர் தெரிவித்தார்.

மிதிகம வடக்கு, கீனகஹவத்த பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவு மற்றும் அறிவுறுத்தலின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிளின் உதவியுடன் ஹரக்கட்டா தப்பிச் செல்ல திட்டமிட்டது தொடர்பாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர், அச்சம்பவத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் பாதுகாப்பு தலைக்கவசம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள வளாகத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் போது சுத்தா என்ற நபர் பாதுகாப்பு தலைக்கவசம் மற்றும் மோட்டார் சைக்கிளை கொண்டு வந்தது தொடர்பாக தகவல் வெளியாகியுள்ளதாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். சந்தேகநபர் தொடர்பான விசாரணையின் போது, அவர் வசித்த இடத்திலிருந்து தலைமறைவாகியிருந்தமை மேலும் தெரியவந்துள்ளது

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்டுடன் சந்தேக நபர் தொடர்பில் இருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது

மேலும், மேலும் அந்த சார்ஜண்ட் நதுன் சிந்தக விக்ரமரத்ன என்ற ஹரக்கட்டா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து தப்பிச் செல்லும் சம்பவம் தொடர்பாக வெளிநாட்டிலிருந்து நடவடிக்கை மேற்கொண்டிருந்த ஜயசேகர விதானகே ருவன் சாமர எனப்படும் மிதிகம ருவானுடனும் வட்சப் தொழில்நுட்பத்துடன் இணைந்து செயல்பட்டதாக தெரியவந்துள்ளதாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வாழைச்சேனை செம்மண்ணோடையில்

# போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் கைது

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர், வாழைச்சேனையின் செம்மண்ணோடை பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 23 வயதுடைய இவரிடமிருந்து 86,000 ரூபா பெறுமதியான போதைப்பொருட்களும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

53 கிராம் 240 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 24 கிராம் கேரள கஞ்சா மற்றும் 30 மில்லிகிராம் கொண்ட 1,950 போதை மாத்திரைகள் விற்பனைக்கு தயார் செய்யப்பட்டநிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# மூன்று மீனவர்களுடன் மீன்பிடிப் படகு மாயம்

கற்பிட்டி பொலிஸில் முறைப்பாடு

கடற்றொழில் நடவடிக்கைக்காக 03 பேருடன் கற்பிட்டியிலிருந்து புறப்பட்ட படகொன்று காணாமல் போயுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஈச்சங்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 21, 37 மற்றும் 38 வயதுடைய மூவர் கடற்றொழில் நடவடிக்கைக்காக இந்தப் படகில் புறப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே இவர்கள் படகுடன் காணாமல் போயுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அப்படகின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளதுடன், கடற்றொழில் நடவடிக்கைக்காக இம்மூவருடன் புறப்பட்ட படகு மீண்டும் கரை திரும்பவில்லையெனவும் தனது முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கடற்படையினருக்கு தாம் தகவல் வழங்கிய நிலையில் அவர்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.





உடல் நலக்குறைவு காரணமாக சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் வன்னி அரசு, தலைமை நிலைய செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்தனர்.

# வெப்பநிலை அதிகரிப்பு; மக்களுக்கு அறிவுறுத்தல்

வளிமண்டலவியல் திணைக்களம்



நாட்டின் சில மாவட்டங்களில் இன்று (09) வெப்பநிலை அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளதாக பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைய வடமேற்கு, தென் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மொனராகலை, இரத்தினபுரி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் உள்ள சில இடங்களில் இந்த வெப்பநிலை அதிகரிப்பு காணப்படுமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இதன்போது மனித உடலால் உணரப்படும் வகையில் வெப்பநிலை அதிகரிப்பு காணப்படுமெனவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

இந்த வெப்பநிலை தாக்கத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துதல், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுத்திருத்தல், கடுமையான வெளிப்புறச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல், இளம் வர்ண ஆடைகளை அணிதல் உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுமாறும், வளிமண்டலவியல் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

# ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி





**உடப்பு குறூப் நிருபர்**

புத்தளம் தெற்கு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் (07) அவ்வித்தியாலய மைதானத்தில் அதிபர் ந.பத்மானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திட்டமிடல் எம்.கமலேந்திரன், ஆசிரிய ஆலோசகர் டபிள்யு.ஏ.டி.பாலித தயானந்த, இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் இ.கலைச்செல்வன், தொழிலதிபர் ஆர்.மகாதேவன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். இல்லங்களாக நாவலர் இல்லம்(சாய்கோபுர வடிவமாகவும்), விபுலானந்தர் இல்லம் (பீரங்கி வடிவமாகவும்), இளங்கோ இல்லம் (மீன் வடிவமாகவும்) அமைக்கப்பட்டது.

இறுதியில் நாவலர் இல்லம் 555 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்தையும், இளங்கோ இல்லம் 507 புள்ளிகளை பெற்று இரண்டாவது இடத்தையும், விபுலானந்தர் இல்லம் 505 புள்ளிகளை பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 26ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 27

## குறள் தரும் சிந்தனை



அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்பில்லாதவர் எல்லாவற்றையும் தனக்கு உரியது என்பார். அன்புள்ளவர்களோ எனது உயிரும் உரியது பிறருக்கு என்பார்.

# போலியான தோற்றப்பாட்டை காண்பிக்கும் பொறுப்பற்ற செயல்!

ஊடகத்துறை கலாசாரம் இப்போது அதன் விழுமிய எல்லையைத் தாண்டி தறிகெட்டுச் சென்று கொண்டிருக்கின்றது. பழம்பெரும் ஊடகங்கள் வரம்பெல்லை மீறாமல் அவற்றின் தடத்தின் வழியே சென்று கொண்டிருக்கையில், புதிதுபுதிதாக முளைத்துள்ள ஊடகங்களோ விழுமிய வரம்பெல்லை கடந்து தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உலகெங்கும் தற்போது இவ்வாறுதான் ஊடகக் கலாசாரம் தொடருகின்றது. அச்சு ஊடகங்களான பத்திரிகைகளை பெரிதாக குற்றம் சொல்வதற்கில்லை. அவற்றில் பெரும்பாலானவை பத்திரிகை தர்மத்தை ஓரளவு கடைப்பிடித்தபடிதான் பயணித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இலத்திரனியல் ஊடகங்கள் பலவற்றிடம் அவ்வாறான ஊடகப்பண்பைக் காண முடியாதிருக்கின்றது.

இவற்றில் சில தொலைக்காட்சிகளையும், பெரும்பாலான இணையத்தளங்களையும் குறிப்பிட்டுக் கூற முடியும். எமது நாட்டின் சில தொலைக்காட்சிகள் எவ்வேளையிலும் பிரதிகூலமான செய்திகளையும், காட்சிகளையுமே ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் கூடுதலானவை அரசாங்கத்துக்கு பாதகமான செய்திகளாக அமைந்துள்ளன.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மையப்படுத்தியதாக அத்தகவல்கள் உள்ளன. மக்களின் சிரமங்களை மிகைப்படுத்தியதாக அவை அமைகின்றன. நாடு மிக மோசமான நெருக்கடிக்குள் உள்ளதாக திரிபுபடுத்தி செய்திகளை அவை ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. மக்கள் மத்தியில் அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் அச்செய்திகள் அமைந்திருக்கின்றன.

மறுபுறத்தில் இணையத்தளங்களின் அபத்தமான காரியங்களை இங்கே குறிப்பிடுதல் வேண்டும். ஏராளமான இணையத்தளங்கள் ஆங்காங்கே முளைத்துவிட்டன. அவற்றின் ஊடகக் கலாசாரம் மிகவும் அருவருப்பாகவே உள்ளது. அவை வெளியிடுகின்ற பெரும்பாலான தகவல்களுக்கு ஆதாரங்கள் எதுவும் கிடையாது. பரபரப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதிலேயே அவை குறியாக நிற்கின்றன.

பக்கச்சார்பான முறையில் செய்திகளையும் தகவல்களையும் வெளியிடுவதன் மூலம் மக்களை திசைதிருப்புவதற்கு அவை முற்படுகின்றன. அதுமாத்திரமன்றி ஏதாவதொரு அரசியல் கட்சியைச் சார்ந்த வகையிலேயே பெருமளவான இணையத்தளங்கள் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

பத்திரிகைகள் சிலவற்றிலும், தமிழ் இணையத்தளங்களிலும் விசேடமான செய்தியொன்று அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அடிக்கடி வெளியிடப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. அதாவது இலங்கையில் பெரும் உணவுப் பஞ்சம் நிலவி வருவதால் நாட்டின் வடக்கிலிருந்து தமிழர்கள் படகுகள் மூலம் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்து வருவதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இச்செய்தியின் உண்மைத் தன்மை குறித்து உறுதிப்படுத்தப்படாத போதிலும், அதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து இணையத்தளங்கள் சிலவற்றிலும், ஓரிரு பத்திரிகைகளிலும் அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன. அதேசமயம் தமிழ்நாட்டின் ஊடகங்களும் இச்செய்திக்கு முக்கியத்துவம் அளித்து வருவதைக் காண முடிகின்றது. அச்செய்திகளைப் பார்க்கின்ற போது இலங்கையின் வடபகுதியில் இருந்து தமிழ் மக்கள் வகைதொகையாக தமிழ்நாட்டுக்குப் படையெடுக்கத் தொடங்கியதைப் போன்ற மாயத்தோற்றம் காண்பிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தைப் பொறுத்தவரை சில விடயங்களை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. இலங்கையின் வடக்கில் இருந்து தமிழர்கள் சட்டவிரோதமான முறையில் தமிழ்நாட்டுக்கு படகுகளில் செல்வதும், அங்கிருந்து திரும்புவதும் காலம் காலமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றது. 1983 இன வன்செயலுக்குப் பின்னர் இந்த இடம்பெயர்வு சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது. அக்காலத்தில் யுத்த சூழலுக்கு அஞ்சி தமிழகத்துக்கு இலங்கைத் தமிழர்கள் படையெடுக்கத் தொடங்கியதில் இருந்து இந்த இடம்பெயர்வு நடந்து வருகின்றது.

யுத்தம் ஓய்ந்த பின்னர் இலங்கை அகதிகளில் சிலர் படகுகளில் தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பியது உண்டு. அதன் பின்னர் அவர்களில் சிலர் இலங்கையில் தொழில்வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தால் மீண்டும் தமிழகத்துக்கு படகில் சென்றதாக தகவல்கள் வெளிவந்தன. இவ்வாறான சம்பவங்கள் அருகருகே அமைந்துள்ள இரு அயல் நாடுகளுக்கிடையில் அவ்வப்போது சாதாரணமாக இடம்பெறுகின்ற சம்பவங்களாகும்.

ஏற்கனவே தமிழகத்தில் அகதிகளாக நீண்டகாலம் வாழ்ந்து விட்டு இலங்கை திரும்பியிருந்தவர்கள், வேலைவாய்ப்புக் கருதியும் அங்கு சென்றிருப்பதற்கு இடமுண்டு. வடபகுதி மக்கள் சிலர் தமிழகத்துக்கு சென்றுள்ள சம்பவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு இலங்கையில் உணவுப் பஞ்சம் நிலவுவதாக போலியான தோற்றப்பாட்டை விதைப்பதற்கு தமிழகத்தின் சில சக்திகள் முனைவதும், இங்குள்ள சில ஊடகங்கள் அதற்கு முன்னுரிமை கொடுப்பதும் முறையல்ல.

தமிழகத்தின் சில அரசியல் சக்திகளின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கேற்ப இங்குள்ள சில ஊடகங்கள் செயற்படுவது தவறாகும். எமது தேசம் மீண்டும் சுமுக நிலைமைக்குத் திரும்ப வேண்டுமென்பதே நம் அனைவரினதும் விருப்பாக அமைய வேண்டும். அதற்கேற்றவாறே இணையத்தளங்கள் செயற்படுவது பொருத்தம்.

editor.tkn@lakehouse.lk

# காத்தான்குடி ஜாமியத்துல் ஹமீதியா அரபு கலாசாலையின் முதலாவது பட்டமளிப்பு விழா இன்று






கிழக்கிலங்கையின் தலைநகரமான மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஜாமியத்துல் ஹமீதியா அரபு கலாசாலையின் முதலாவது பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை மிக விமரிசையாக நடைபெறுகிறது.

காத்தான்குடி தேசிய பாடசாலை பரீத் அரங்கில் கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் எஸ்.எஸ்.எம்.ரமீஸ் ஜமாலியின் தலைமையில் இதன் முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது.

2021ஆம் ஆண்டு ஹமீதியா அரபு கலாசாலை ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் ஸ்தாபகர் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் எஸ்.எச்.எம்.ரமீஸ் ஜமாலி என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் 65 மாணவர்களை கொண்டு இயங்கி வருகின்ற இந்த அரபு கலாசாலையில் பல்வேறு பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஷரியா பிரிவு, சுயகற்றல் பிரிவு, அல்குர்ஆன் மனனப் பிரிவு, பாடசாலை கல்விப் பிரிவு, மற்றும் அஹதியா பிரிவு என்பன இந்த அரபு கலாசாலையில் செயற்பட்டு வருகின்றன. இந்த அரபு கலாசாலையில் ஏழாம் ஆண்டில் இணைகின்ற ஒரு மாணவன் 13ஆம் ஆண்டு ஆகின்றபோது மௌலவி பட்டம் பெற்று வெளியேற முடியும் என்பதுடன், பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அரபு கல்லூரியில் 65 உள்ளூர் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஏழு விரிவுரையாளர்களும் ஐந்து ஆசிரியர்களும் கடமை புரிவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அரபு கலாசாலையில் மௌலவிகளாக பட்டம் பெற்று வெளியேறுகின்றவர்கள், சமகால அறிவியல் உலகுக்கு ஏற்ப தம்மை ஆன்மிக கல்வியிலும் லௌகீக கல்வியிலும் தயார்படுத்திக் கொள்கின்றமை விசேட அம்சமாகும்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, காத்தான்குடி பிரதேசத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என்று பல அரபு கலாசாலைகள் இயங்குகின்ற போதிலும், ஜாமியத்துல் ஹமீதியா அரபு கல்லூரி அண்மைக்காலமாக ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் சிறப்பாக அதனுடைய கல்விப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தரமான உலமாக்களும் மற்றும் ஆசிரியர்களும் இந்த கலாசாலையில் விரிவுரையாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் கடமை புரிவதினால் இங்கு பயிலுகின்ற மாணவர்கள் தமது அறிவுத் திறனையும் தேடலையும் மிக நேர்த்தியாக பூர்த்தி செய்து கொள்ளுவதாக அங்கு பயிலுகின்ற மாணவர்கள் தெரிவிக்கின்றனர்

இன்றைய முதலாவது பட்டமளிப்பு விழாவின் போது ஐந்து மாணவர்கள் மௌலவிகளாகவும் இரண்டு மாணவர்கள் ஹாபில்களாகவும் பட்டம் பெற்று வெளியேறுகின்றமை குறிப்பிடத்தக்கது. காத்தான்குடி பரீட் அரங்கில் நடைபெறுகின்ற முதலாவது பட்டமளிப்பு விழாவில் கிழக்கு பல்கலைக்கழக முக்கியஸ்தர்கள் மற்றும் பல அரசியல் பிரமுகர்களும் கல்விமான்களும் அதிதிகளாக கலந்து கொள்ள இருக்கின்றமை மிகச் சிறப்பம்சமாகும்.



ரீ.எல்.ஜவ்பர்கான்...
(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

# மாத்தளை மலரன்பனின் 'கொலுஷா' பிறமொழி சிறுகதைகள்

**கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்–குழு வெளியீடான மாத்தளை மலரன்பனின் 'கொலுஷா – பிறமொழிச் சிறுகதைகள்' நூல் வெளியீடு 03.03.2024 அன்று நடைபெற்ற போது, பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பெருமாள் சரவணகுமார் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி....**



மலையகத்தின் தலைவாசல் மாத்தளை மாநகர். மலையக மக்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடைய ஒரு பிரதேசமாகும். ஏனைய பிரதேசங்களுக்கு இல்லாத பல சிறப்புகள் மாத்தளைக்கு உண்டு. மலையக இலக்கிய வரலாற்றிலும் மாத்தளை பிரதேசம் பல நிலைகளில் சிறப்புக்குரியது. இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் 'மலையக இலக்கியம்' என்பதை மிக அழுத்தமாக பதிவு செய்வதற்கான பல முன்னோடி முயற்சிகள் மாத்தளையிலிருந்து தொடங்கியிருக்கின்றன. அந்த வரலாறு மிக விரிவாக எழுதப்பட வேண்டிய ஒன்று. மாத்தளை மண்ணிலிருந்து மலையக மக்களின் வாழ்வியல் கோலங்களை இலக்கியப் படைப்புகளாக சித்தரித்தவர்களுள் மலரன்பனும் ஒருவர்.

இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் மாத்தளை மலரன்பன் பன்முக அடையாளங்களைக் கொண்டவர். சிறுகதை ஆசிரியர், நாவல் ஆசிரியர், மெல்லிசைப் பாடல் ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர் என பல தளங்களில் இயங்கி வருபவர். மலையகத்தில் 1960 களில் உருவான சமூக, இலக்கிய அலையினால் உந்தப்பட்டு, இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர் மலரன்பன்.

மாத்தளை மலரன்பனின் புனை கதை உலகம் தனித்துவமானது. அதற்கான அடிப்படைக் காரணம் அவரது புனை கதைகளில் அமைந்திருக்கின்ற கதைக் களமும் மனிதர்களும் பிரச்சினைகளும் என்றே சொல்லலாம். மலையக இலக்கியப் பரப்பில் பேசப்படாத பக்கங்களை அவரது புனை கதைகள் பேசுகின்றன. இதுவரைக்கும் அவரது கோடிச்சேலை 1989, பிள்ளையார் சுழி 2008, பால்வனங்களில் 2019 ஆகிய புனைகதைகள் வெளிவந்துள்ளன. மலரன்பனின் இறப்பர் தோட்ட மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட எழுத்துகள், ஒட்டுமொத்தமான தமிழ் இலக்கியப் பரப்பிலும் அவருக்கு நிலையான ஓர் இடத்தினை வழங்கியிருக்கின்றது. அத்தோடு, இன வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர் குறித்த படைப்புகள், சிங்களக் கொலனிகளில் தொழில் செய்கின்ற பெருந்தோட்டத் தொழிலாளர்கள் குறித்த அவரது எழுத்துகள், மலரன்பனின் படைப்புவெளியின் பன்முகத் தன்மையை காட்டுவன.

மலரன்பனின் இலக்கியச் செயற்பாட்டில் மிக வளமான ஒரு பகுதியாகவே அவரது மொழிபெயர்ப்பு முயற்சிகள் அமைந்திருக்கின்றன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் முதலான மொழிகளில் அவருக்கு இருக்கும் புலமையும் பரந்த வாசிப்பும் அவரது மொழிபெயர்ப்புகளை தனித்துவம் உடையதாக்கியிருக்கின்றன. குறிப்பாக சிங்கள இலக்கிய உலகோடு மிக நெருங்கிய தொடர்புடையவர் மலரன்பன். இதன் காரணமாக சிங்கள இலக்கியப் பரப்பில் நன்கு அறியப்பட்டவர். மலரன்பனின் சிறுகதைகள், உபாலி லீலரத்னவால் 'பெரிய தம்பிகே தித் எலுவா' என்ற தலைப்பில் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மலரன்பன் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த படைப்புகளுள் அவன் ஓர் அபூர்வ சிறுவன் 2014, மாத்தளை போராட்டத்தின் உப கதை 2017 ஆகியன அவரின் மொழிபெயர்ப்பு ஆளுமையை காட்டுவன எனலாம். இவ்விரு மொழிபெயர்ப்பு படைப்புகளுக்கும் அரச சாஹித்திய விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளை மலரன்பனின் மொழிபெயர்ப்பு செயற்பாடுகளில் அண்மைய வரவு 'கொலுஷா – பிறமொழிச் சிறுகதைகள்' என்ற படைப்பு. அவரது ஏனைய மொழிபெயர்ப்புகளிருந்து பல நிலைகளில் வேறுபட்டதும் தனித்துவமானதும் ஆகும்.

மலையகத்தின் இலக்கிய ஆளுமைகளின் படைப்புகளை நூல் வடிவில் வெளிக்கொணரும் அரிய பணிகளை, கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு செய்து வருகின்றது. அந்த வகையில் சி.வி.வேலுப்பிள்ளை, என்.எஸ்.ராமையா, தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன் ஆகியோரது மிக முக்கியமான எழுத்துக்கள் இந்நினைவுக்குழு ஊடாக வெளிவந்துள்ளன.

மேலும் பல செம்பதிப்பு நூல்கள் வெளிவர இருக்கின்றன என்பதையும் அறிய முடிகின்றது. இந்த செம்பதிப்புத் திட்டத்தை முன்னெடுத்து செயல் வடிவமாக்கிக் கொண்டிருக்கின்ற மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோரது உழைப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

அக்குழுவின் வெளியீடுகளின் அண்மைய வரவு மலரன்பனின் 'கொலுஷா பிறமொழிச் சிறுகதைகள்' ஆகும். கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு வெளியீடுகள், இலக்கியத் தரத்திலும் அச்சாக்க முறையிலும் தனிச் சிறப்புடையன என்பதை 'கொலுஷா' தொகுப்பு நூலிலும் கண்டுகொள்ள முடிகின்றது. இந்நூலுக்கு மு.நித்தியானந்தன் எழுதியுள்ள அணிந்துரை, மாத்தளை மலரன்பனின் படைப்புலகத்துக்குள் நுழைவதற்கான நல்ல வாயிலாக அமைந்துள்ளது.

சிங்கள இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட சாலிய குணவர்தன ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்த பத்து உலகச் சிறுகதைகளையும் சிங்களமொழியில் எழுதப்பட்ட நான்கு கதைகளையும் மலரன்பன், தமிழ்ப் படைப்புலகுக்கு கொண்டு வந்திருக்கின்றார்.

உலக சிறுகதை பரப்பை செதுக்கிய ரஷ்ய எழுத்தாளுமைகளான மெக்சிம் கோர்க்கி, லியோ டோல்ஸ்டோய், அன்டன் செக்கோவ் ஆகியோரது கதைகளும், இந்திய எழுத்தாளுமைகளான பிரேம்சந்த், சத்தியஜித் ரே, சம்புநாத் வர்மா, கமலாதாஸ் ஆகியோரது கதைகளும் துருக்கி – சிவ்தெத் குத்ரெத், நைஜீரியா – சினுவா ஆச்சுபே, பிரெஞ்சு – கீ.த.மொப்பசான் ஆகியோரது கதைகளும் சிங்களமொழியிலிருந்து நான்கு கதைகளுமாக இத்தொகுப்பில் பதினான்கு கதைகள் உள்ளன.

மலரன்பனின் மொழிபெயர்ப்பு ஆளுமையை இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு கதையிலும் கண்டுகொள்ள முடிகின்றது. இலக்கிய மொழிபெயர்ப்பாளன் ஒரு நல்ல படைப்பாளியாக இருக்கும் போது, அந்த மொழிபெயர்ப்பு மேலும் வளமானதாகவும் இலக்கியச் செழுமை நிறைந்ததாகவும் அமைந்து விடும் என்பதற்கு இத்தொகுப்பிலுள்ள கதைகள் நல்ல எடுத்துக்காட்டாக உள்ளன.

இத்தொகுப்பிலுள்ள மெக்சிம் கோர்க்கியின் 'கொலுஷா' சிவ்தெத் குத்ரெத்தின் மரண வீட்டுச் சாப்பாடு, லியோ டோல்ஸ்டோயின் உண்மைமை வெளிவரும் நாளில் சினுவா ஆச்சுபேயின் மரணித்தவர்களின் பாதை முதலான கதைகள் நிலம், காலம், சமூகம் கடந்த மானுட மேன்மையை பிரதிபலிக்கும் வாழ்க்கை சித்திரங்களாக அமைந்திருக்கின்றன.

'கொலுஷா – பிறமொழிச் சிறுகதைகள்' நூலில் இடம்பெறும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட கதைகளின் மொழிபெயர்ப்புகள் மிக முக்கியமானவை. அண்மைக்கால சிங்கள இலக்கிய சூழலையும் படைப்பாக்கச் செயற்பாடுகளையும் புரிந்துகொள்வதற்கான வாயிலாக இக்கதைகள் உள்ளன. அந்த வகையில் இத்தொகுப்பிலுள்ள ஜி.பி.சேனநாயக்கவின் பழி, தெனகம சிறிவர்தனவின் அமைச்சரின் முகம், கபிலகுமார காலிங்கவின் இரண்டு நடிப்புகள், காமினி நிஸாந்த கருணாரத்னவின் மலைப்பாம்புகள் ஆகிய கதைகள் சமகால சிங்கள சிறுகதைகளின் போக்குகளை பிரதிபலிப்பனவாகும்.

மலரன்பனின் 'கொலுஷா – பிறமொழிச் சிறுகதைகள்' தொகுப்பு நூல் தமிழ் இலக்கிய உலகுக்கு நல்ல வரவு என்றே சொல்ல வேண்டும். இலக்கிய வாசிப்பை விசாலிப்பதற்கான தளத்தையும் நாடு, மொழி, இனம் கடந்த மானுட மேன்மையை கட்டமைப்பதற்கான இலக்கிய சூழலையும் இந்த மொழிபெயர்ப்பு அவாவி நிற்கின்றது எனலாம்.

## 7ஆவது பாகிஸ்தான் இராணுவ குழு செயற்பாடு–2024

# தங்கப்பதக்கத்துடன் நாடு திரும்பிய அணி



ஏழாவது பாகிஸ்தான் இராணுவக் குழுச் செயற்பாடு 2024 போட்டியில் கலந்துகொண்ட இலங்கை இராணுவ அணி, கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி தங்கப்பதக்கத்தை வென்றதுடன், அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) நாட்டை வந்தடைந்தனர்.

பாகிஸ்தான் இராணுவ குழுச் செயற்பாடு என்பது பாகிஸ்தான் இராணுவத்தின் மேற்பார்வையின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த பணி மற்றும் கடமை சார்ந்த பயிற்சியாகும்.

இப்போட்டியின் மூலம் உடற் தகுதி, மன உறுதி மற்றும் தந்திரோபாய நிபுணத்துவம் ஆகியவற்றில் மிக உயர்ந்த தரத்தை வலியுறுத்துவதுடன், முக்கியமாக சிப்பாயின் பண்புகளை வெளிப்படுத்துகிறது. மூன்று பகல்கள் மற்றும் இரு இரவுகள் கொண்ட சவாலான 60 மணித்தியாலய போட்டியில் ஓய்வுகாலம் இல்லை.

முன்னதாக இப்போட்டியில் கலந்துகொண்ட இலங்கை இராணுவ அணி, வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றிருந்தன. 2024 பெப்ரவரி 25 முதல் 27வரை பாகிஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியில் அமெரிக்கா, தாய்லாந்து, கட்டார், சவுதி அரேபியா, மொராக்கோ, துருக்கி, பஹ்ரைன், ஜோர்தான் உள்ளிட்ட 12 நாடுகளில் 22 அணிகள் பங்கேற்றன.

3 அதிகாரிகள் மற்றும் 8 சிப்பாய்களைக் கொண்ட இலங்கை இராணுவக் குழு, நிகழ்வு முழுவதும் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி, முதலிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# எடிசன் திரை விருதுகளில் இசை அரசன் யார்?







தமிழ்த் திரையுலகில் முக்கிய விருது என உலகத் தமிழர்களால் போற்றப்படும் எடிசன் திரை விருதுகளின் தேர்வுப் பட்டியலில் சிறந்த இசையமைப்பாளர் மற்றும் பின்னணி இசை வரிசையில் இளையராஜா, ஏ. ஆர். ரகுமான், அனிருத், G.V பிரகாஷ், சந்தோஷ் நாராயணன், யுவன் சங்கர் ராஜா, தமன், ஷான் ரோல்டன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

தேர்வுக்குழு வாக்குகளை அலசி ஆராயும்போது பல்வேறு இசையமைப்பாளர்களின் வாக்குகள் அதிகமாக பெறுவது மட்டுமல்லாமல் சிறிய வாக்கு வித்தியாசத்தில் வாக்குகளைப் பெற்று வருகின்றனர்.

வாக்களித்த மக்களின் எண்ணங்களை ஊக்குவிக்கும் விதமாக இவ்வாண்டு மூன்று வித இசையமைப்பாளர்களாக விருது வழங்கப்பட உள்ளது. சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பின்னணி இசைக் கோர்ப்பாளர், இசை அரசன் எனவும் புதுமுக இசை அமைப்பாளர் விருதும் வழங்கப்பட உள்ளது என எடிசன் விருது குழு மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் செல்வகுமார் தெரிவித்தார்.

மேலதிக விபரங்களுக்கு +60166167708 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம்.








## மெல்பேர்ணில் ஆசியான்-அவுஸ்திரேலிய மாநாடு:

# பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க உறுதிப்பாடு

ஐம்பதாண்டு ஆசியான் அவுஸ்திரேலிய உறவை நினைவுகூரும் விதமாக மார்ச் 46 மார்ச் 2024இல் மெல்போர்ன் நகரில் "ஆசியான் அவுஸ்திரேலியா உச்சி மாநாடு" (ASEAN Australia Summit) நடைபெற்றது.

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு(Association of Southeast Asian Nations) என்பது தென்கிழக்காசியாவின் 10 நாடுகளின் பொருளாதார, மற்றும் புவியியல் சார்ந்த அரசியல் கூட்டமைப்பு ஆகும்.

இதனை ஓகஸ்ட் 8, 1967 இல் இந்தோனசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து அமைத்தன. அதன் பின்னர் புரூணை, மியான்மர், கம்போடியா, லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் இக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டன.

பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தல், உறுப்பு நாடுகளிடையே சமூக, மற்றும் பண்பாட்டு உறவுகளைப் பேணல், பிராந்தியத்தில் அமைதி பேணல், உறுப்பு நாடுகளுக்கு ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பத்தை வழங்குதல் என்பன இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோள்களில் அடங்குகின்றன.

2007 ஆம் ஆண்டில் ஆசியான் கூட்டமைப்பு தனது 40 ஆவது வருட நிறைவு விழாவையும் ஐக்கிய அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவுகளின் 30 வருடப் பூர்த்தியையும் கொண்டாடியது. 2013 ஆம் ஆண்டளவில் சீனா, ஜப்பான், தென் கொரியா, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதென 26 ஒகஸ்ட் 2007 இல் தீர்மானிக்கப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டில் ஆசியான் பொருளாதார சமூகத்தை நிறுவுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

**ஆசியான் அவுஸ்திரேலிய மாநாடு:**

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு உடனான அவுஸ்திரேலியாவின் கூட்டாண்மையானது, தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துடனான நட்புறவின் மையமாகும். அவுஸ்திரேலியா மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகள் நமது பொருளாதாரங்கள் மூலம் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளன.



நிலையான, அமைதியான மற்றும் செழிப்பான ஒரு பிராந்தியத்தை உருவாக்க இம்மாநாடு உதவுகிறது.

முதலில் இந்த உச்சிமாநாடு 2021 இல் நிறுவப்பட்ட விரிவான மூலோபாய கூட்டாண்மையின் கீழ் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. தொடர்ந்து ஆசியான்அவுஸ்திரேலியாவின் அடுத்த 50 ஆண்டுகால ஒத்துழைப்பை எதிர்நோக்குவதற்கு தலைவர்களை ஒன்றிணைக்க முயல்கிறது. இந்த சிறப்பு உச்சி மாநாடு பொருளாதார, காலநிலை மற்றும் தூய்மையான எரிசக்தி மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு முயற்சிகளை வளர்ப்பதற்கு வளர்ந்து வரும் தலைவர்கள் மற்றும் நிபுணர்களை ஒன்றிணைக்க உதவுகிறது.

மூன்று நாள் உச்சிமாநாட்டில் வணிகம், வளர்ந்து வரும் தலைவர்கள், காலநிலை மற்றும் தூய்மையான ஆற்றல் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு ஆகிய முக்கிய விடயங்களை மையமாகக் கொண்ட நிகழ்வுகள் மூலம் மேலும் உறவை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

அவுஸ்திரேலியா, ஆசியானுடன் நீண்டகால உறவு கொண்டுள்ளது. அது ஆசியானுடன் ஆகப் பழமையான கலந்துரையாடல் நாடாகவும் 1974ஆம் ஆண்டு முதல் இருந்து வந்துள்ளது.

**அவுஸ்திரேலியா உதவி:**

இந்தச் சிறப்பு மாநாடு முதன்முதலில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்றது. அது இரண்டாம் முறையாக இவ்வாண்டு நடைபெற உள்ளது. ஆசியான் அமைப்பும் அவுஸ்திரேலியாவும் கடந்த 2021ஆம் ஆண்டு முழுமையான உத்திபூர்வ பங்காளித்துவ அமைப்பை ஏற்படுத்தின. எரிசக்தி உருமாற்றம், ஆட்கடத்தலை முறியடிப்பது ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பது இதன் நோக்கம்.



மாநாட்டில் ஆசியான் அவுஸ்திரேலியத் தலைவர்கள் உறவுகளை வலுவாக்கவும் விரிவுபடுத்துவதும் குறித்து வழிவகைகளை ஆராய்வர், குறிப்பாக பசுமை, மின்னிலக்கப் பொருளியல் தொடர்பாக என்று கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் தென்கிழக்கு ஆசிய பொருளாதார வியூகத்தின் முக்கிய துறைகள் மற்றும் கருப்பொருள்கள் மீது கவனம் செலுத்தும் "மூர் அறிக்கை" (The Moore Report) திட்டபபடி தென்கிழக்கு ஆசியா இடையே அதிக வர்த்தக முதலீட்டுக்கு மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுடன் பலதரப்பு பேச்சுவார்த்தை நடந்தன.

மெல்பேர்ணில் நடைபெறும் ஆசியான் விசேட மாநாட்டில் பங்கேற்றுள்ள உலக நாட்டு தலைவர்களுடன் அவுஸ்திரேலிய பிரதமர் பலதரப்பு சந்திப்புகளை நடத்தி வருகின்றார்.

ஆசியான் நாடுகளுடனான பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பிலும் பசுமை மற்றும் காலநிலை சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

சிங்கப்பூர் பிரதமருடன் பேச்சுவார்த்தை:

சிங்கப்பூர் அவைஸ்திரேலியத் தலைவர்களும் ஆசியான் அவுஸ்திரேலிய மாநாட்டில் சந்தித்துள்ளனர். இந்த சிறப்பு மாநாட்டில் கலந்துகொள்ள சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் மார்ச் 4ஆம் திகதியிலிருந்து 6ஆம் திகதிவரை மெல்பர்ண் சென்றுள்ளார்.

அவரது மூன்று நாள் அவுஸ்திரேலிய பயணத்தில் அவர் பிரதமர் ஆண்டனி அல்பனிசைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு நிகழ்வு 2015ஆம் ஆண்டு கையெழுத்தான சிங்கப்பூர் அவுஸ்திரேலிய முழுமையான உத்திபூர்வ பங்காளித்துவ ஒப்பந்தத்தின்கீழ் இடம் பெறுகிறது.




அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பனிஸ் சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்பின்போது பிராந்திய பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வேலைவாயப்பு, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த இருதரப்புச் சந்திப்பில் இருநாட்டுப் பிரதமர்களும் தங்களுக்கு இடையே ஒத்துழைப்பு தொடர்பாகவும், பிராந்திய அனைத்துலக நிலவரம் தொடர்பாகவும் கருத்துப் பரிமாறிக்கொள்வர்.

அத்துடன், பிரதமர் லீ ஐம்பதாண்டு ஆசியான்அவுஸ்திரேலிய கலந்துரையாடல் உறவை நினைவு கூரும் விதமாக ஆசியான் சிங்கப்பூர் உச்சநிலை மாநாட்டிலும் கலந்துகொள்கின்றார்.இதன்போது சிங்கப்பூர் வருமாறு அவுஸ்திரேலிய பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பனிஸ் தாய்லாந்து பிரதமருடனான சந்திப்பின்போது காலநிலை மாற்றம், பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஒத்துழைப்புகள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் மலேசிய பிரதமருடனான சந்திப்பின் போது காசா நிலைவரம் பற்றியும் பேசப்பட்டுள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# 377 ஆசனங்களைப் பெற்று பா.ஜ.க மீண்டும் ஆட்சியமைப்பது உறுதி!




**காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணிக்கு 94 ஆசனங்கள் மாத்திரமே கிடைக்கும்!**

இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆதரவான புயல் வலுவாக வீசும் என்று பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

இந்தியாவில் நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக பல நிறுவனங்கள் கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு வருகின்றன.

'ஸி நியூஸ்' நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பின் போது பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 377 இடங்களை வென்றெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

MATRIZE அமைப்புடன் இணைந்து 'ஸி நியூஸ்' நிறுவனம் தேர்தல் கருத்துக்கணிப்பு ஒன்றை மேற்கொண்டது. இதில் பா.ஜ க சொல்வதுபோல, அந்தக் கட்சி தலைமையிலான NDA கூட்டணிக்கு 400 தொகுதிகள் கிடைக்கப் போவதில்லை. ஆனால், 370 தொகுதிகளைக் கைப்பற்றக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அண்மைய கணக்கெடுப்பின்படி, நாடு முழுவதும் உள்ள 543 நாடாளுமன்றத் தொகுதிகளில் 377 இடங்களில் என்.டி.ஏ கூட்டணிக்கு சாதகமான அலை வீசுவது தெரிகிறது. ஆனால், இந்தத் தேர்தலில் பின்னடைவைச் சந்திக்கும் காங்கிரஸ் தலைமையிலான 'இந்திய கூட்டணி' 94 இடங்களை மட்டுமே கைப்பற்றும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் தேர்தல் களைகட்டி விட்டது. அனைத்துக் கட்சிகளும் தங்களின் முழு பலத்தையும் ஒன்றிணைத்து தேர்தல் வியூகங்கள் அமைத்து வருகின்றன. இதற்கிடையில், அரசியல் வியூகங்களும் கருத்துக் கணிப்புகளும் ஏற்கனவே தொடங்கி விட்டன.

தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக, எந்தக் கட்சிக்கு தேர்தல் களம் சாதகமாக இருக்கிறது என்ற கணிப்பை MATRIZE மற்றும் ஸீ நியூஸ் இணைந்து நடத்தின. இதில் பா.ஜ.க தலைமையிலான என்.டி.ஏ கூட்டணிக்கு மக்களின் ஆதரவு அதிகரித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

கருத்துக் கணிப்பு நடத்தப்பட்ட காலகட்டம் சமீபமானது என்பதால் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது உறுதியாகத் தென்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தக் கருத்துக்கணிப்பின் போது மக்களவையின் 543 தொகுதிகள் குறித்து 1,67,843 பேரிடம் இருந்து கருத்துக்கள் பெறப்பட்டன. 87 ஆயிரம் ஆண்களும், 54 ஆயிரம் பெண்களும் கலந்து கொண்ட கருத்துக் கணிப்பில் 27 ஆயிரம் முதல்முறை வாக்காளர்களின் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன.

கருத்துக்கணிப்பு முடிவுகளைப் பொறுத்தவரை இதில் 2 சதவீதம் அதிகரிக்கவோ அல்லது குறையவோ செய்யலாம். இது பொதுமக்களின் தேர்தல் தொடர்பான கருத்துக்கள் ஆகும். யார் வெற்றி பெறலாம் என்ற மக்களின் மனோநிலையை பிரதிபலிக்கும் ஊகங்களே ஆகும்.



**அனைத்துக் கருத்துக் கணிப்புகளும் நரேந்திர மோடியின் வெற்றியை உறுதி செய்கின்றன**

ஸீ நியூஸ் மேட்ரிஸின் கருத்துக் கணிப்பின்படி, தமிழகத்தில் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கு 36 இடங்களில் வெற்றி கிடைக்கலாம் என்றும், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு தொகுதியில் கால் பதிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் முழு வடகிழக்கிலும் தேசிய ஜனநாயக கூட்டணியின் செல்வாக்கு இருக்கும் என்று கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன.

அஸ்ஸாமின் புள்ளிவிவரங்கள் பா.ஜ.கவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றன. 14 நாடாளுமன்றத் தொகுதிகளில் 11 இல் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற வாய்ப்புள்ளது.

Zee News Matriz இன் கருத்துக்கணிப்பின்படி, நாடாளுமன்றத் தேர்தல் 2024, வடகிழக்கில் என்.டி.ஏவுக்கு 10 இடங்களையும், I.N.D.I.A. கூட்டணிக்கு 1 இடம் பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் அசாமில் என்.டி.ஏ 11 இடங்களை வென்றெடுக்கும். ஐ.என்.டி.ஐ.ஏ. கூட்டணிக்கு 1 இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சண்டிகார், அந்தமான், கோவா மற்றும் தாத்ராநகர் ஹவேலியில் இந்திய கூட்டணிக்கு பெரிய அளவில் வெற்றி வாய்ப்பு இருக்காது என்று கூறப்படுகிறது. கருத்துக்கணிப்பின்படி, சண்டிகர், அந்தமான், கோவா மற்றும் தாத்ராநகர் ஹவேலி ஆகிய இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என கணிக்கப்பட்டுள்ளது.

Zee News Matriz கருத்துக்கணிப்பின்படி, லடாக்கில் NDA வெற்றி பெறலாம், லட்சத்தீவில் I.N.D.I.A வெற்றிபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான கருத்துக் கணிப்புகள் வெளியாகியுள்ள நிலையில் பா.ஜ.க ஆட்சி செய்யாத மாநிலங்களின் நிலை என்ன என்பது குறித்தும் ஆராய வேண்டியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இந்தியா முழுதும் அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றன. பா.ஜ.கவை வீழ்த்த 25 இற்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணி உருவாகியுள்ளது. மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள கட்சிகள் கூட்டணி பேச்சுவார்த்தையை தொடங்கி வருகின்றன.



மக்களவைத் தேர்தலுக்கான திகதி எவ்வேளையிலும் அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனைத் தொடர்ந்து மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 2 ஆவது வாரம் முதல் மே 2 ஆவது வாரம் வரை பல்வேறு கட்டங்களாக நடத்தப்படும் என அரசியல் வல்லுநர்கள் கணிப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இதற்கான பணிகளில் இந்திய தேர்தல் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள தீவிரம் காட்டி வருகின்றன.

குறிப்பாக கூட்டணிப் பேச்சுவார்த்தையை இறுதிசெய்து, தொகுதி பங்கீட்டை முடிவு செய்யும் பணியில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. மத்தியில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும், காங்கிரஸ் தலைமையிலான INDIA – கூட்டணியும் நேருக்கு நேர் மோதுகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை INDIA கூட்டணி தி.மு.க தலைமையில் களம் இறங்குகிறது.

இந்த நிலையில் 'மூட் ஒப் தி நேஷன்' என்ற தலைப்பில் 'இந்தியா டுடே' மற்றும் 'சி வோட்டர்ஸ்' இணைந்து இந்தியா முழுவதும் கருத்துக்கணிப்பு நடத்தியிருக்கிறது. இதன்படி கடந்த ஆண்டு டிசம்பர். 15 முதல் 2024 ஜனவரி 28 வரை 35,801 பேரிடம் கருத்துக் கேட்கப்பட்டிருக்கிறது. இதன்படி முடிவுகள் வெளியாகியுள்ளன.

'சிவோட்டர்ஸ்' வெளியிட்டுள்ள கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி பெரும்பான்மை இடங்களை பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பெறும் என்பது தெளிவாகியுள்ளது. இதன்படி மொத்தமாக 301 இடங்களை தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் 71 இடங்களை இந்தியா கூட்டணி பிடிக்க வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

## ரோயல் கல்லூரி - புனித தோமஸ்

# 145 ஆவது கிரிக்கெட் சமர் போட்டியை ஜனாதிபதி பார்வையிட்டார்





கொழும்பு SSC மைதானத்தில் கொழும்பு ரோயல் மற்றும் கல்கிஸ்ஸ புனித தோமஸ் கல்லூரிகளுக்கு இடையிலான நீலப் போர் கிரிக்கெட் சமர் போட்டியை பார்வையிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (08) பிற்பகல் இணைந்து கொண்டார். வீரர்களை உற்சாகப்படுத்தும் வகையில் போட்டியை பார்வையிட்ட ஜனாதிபதி, போட்டியைக் காண வந்திருந்த மக்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

## வார இறுதி விடுமுறையையொட்டி

# வடக்கு, மலையகத்திற்கு விசேட ரயில் சேவைகள்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

*வார இறுதி நீண்ட விடுமுறையையொட்டி வடக்கு மற்றும் மலைநாட்டுக்கு விசேட ரயில் சேவைகளை நடத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.*

*அந்த வகையில் வடக்கு ரயில் பாதையில் அநுராதபுரம் மற்றும் காங்கேசன்துறைக்கிடையில் இந்த வார இறுதி விசேட ரயில் சேவைகள் இடம்பெறும் என்றும் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையம் வரை இந்த ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*அந்த வகையில் அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து காலை 6.00 மணிக்கு காங்கேசன்துறைக்கும் பிற்பகல் 4.30 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து அநுராதபுரம் வரைக்கும் இந்த ரயில் சேவைகள் நடைபெறும். அதேவேளை இன்று 08ஆம் திகதி காலை 7.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பதுளைக்கான விசேட ரயில் சேவையும் 10 ஆம் திகதி காலை 7.45 மணிக்கு பதுளையிலிருந்து கொழும்புக்கான ரயில் சேவையும் இடம்பெறவுள்ளது. அத்துடன் இன்றும் நாளையும் எதிர்வரும் 10ஆம் திகதியும் காலை 7.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பதுளைக்கும் அதே தினங்களில் மாலை 5.20 மணிக்கு பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.*

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த...

கொல்லப்பட்டுள்ளதுடன், சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் தர்ஷனி டிலந்திகா ஏகநாயக்க என்ற 35 வயதுடைய தாயார், இனுகா விக்கிரமசிங்க வயது 07, அஷ்வினி விக்கிரமசிங்க வயது 04, இரண்டு வயது ரினியானா விக்கிரமசிங்க மற்றும் இரண்டு மாதக் குழந்தை கெல்லி விக்கிரமசிங்க ஆகியோருடன் அதே வீட்டில் குடியிருந்த மற்றைய நபரான காமினி அமரகோன் என்ற 40 வயது நபரும் கொல்லப்பட்டுள்ளார்.

குழந்தைகளின் தந்தையான தனுஷ்க விக்கிரமசிங்க படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கனடாவுக்கு கல்வி கற்க வந்த 19 வயதுடைய இலங்கையைச் சேர்ந்த ஃபெப்ரியன் டி சொய்சா என்ற இளைஞனே இந்தக் கொலைகளை செய்துள்ளதாக ஒட்டாவா பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். சந்தேக நபர் வீட்டில் வசித்து வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கொலைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. கனடாவின் ஒட்டாவாவின் Barrhaven புறநகர் பகுதியிலுள்ள வீடொன்றிலேயே கடந்த 06ஆம் திகதி இரவு இப்படுகொலை அரங்கேறியுள்ளது.

கனேடிய ஊடகங்களின்படி 911 என்ற எண்ணுக்கு (06) இரவு 10:50 மணியளவில் இந்த அழைப்பு பதிவாகியுள்ளதாகவும், அதனுடன் பொலிஸ் கார்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் வீட்டுக்கு அருகில் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குடும்பத்தில் ஏற்பட்ட தகராறா? என்ற சந்தேகம் குறித்து பொலிஸாரிடம் கேட்ட போது, குடும்ப தகராறு இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களி ல் இலங்கைப் பெண்ணும் அவரது நான்கு குழந்தைகளும் அடங்குவதாகவும், இலங்கையின் தந்தை உயிர் பிழைத்த போதிலும் படுகாயமடைந்துள்ளதாகவும் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என கனடாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் உறுதிப்படுத்தியுள்ளது. இதேவேளை, கொலைச் சம்பவத்திற்கு முன்னர் இலங்கை குடும்பத்தினரிடம் இருந்து பொலிஸாருக்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை என ஒட்டாவா பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இறந்த நான்கு குழந்தைகளில் இரண்டரை மாத பெண் குழந்தை கனடாவில் பிறந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இந்தக் கொலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள போதிலும், சந்தேகநபர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக ஒட்டாவா பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். கொல்லப்பட்ட நான்கு குழந்தைகளும் 07 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இது மிகவும் சோகமான சம்பவம் எனவும் ஒட்டாவா பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இடத்தில் தங்கியிருந்த போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சந்தேகநபருக்கு எதிராக 06 கொலைக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஒரு கொலை முயற்சி குற்றச்சாட்டொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபர் நேற்று முன்தினம் (07) முதன் முறையாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும், சந்தேக நபரை மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் ஒட்டாவா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

### நிதி நெருக்கடி நிலையிலுள்ள...

அரவிந்தகுமார் இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

“2024/2025 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட 'ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில்' திட்டம் பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடிப்பதற்கு பெரும் ஆதரவை வழங்கும் என்பதைக் கூற வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. குறிப்பாக, கல்வியில் திறமை காட்டினாலும், கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழக்க, குடும்ப வருமானம் இன்மை ஒரு காரணமாக இருக்கக் கூடாது. எனவே, நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், குழந்தைகளின் கல்வி வாய்ப்புகளை பாதுகாப்பதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. கல்விச் சீர்திருத்தங்களில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். பாடசாலையில் தரம் 13 இல் நடைபெறும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் காலங்களில் தரம் 12 இல் நடத்த எதிர்பார்த்துள்ளோம். மேலும், தற்போது தரம் 11 இல் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை தரம் 10 இல் நடத்தவும் எதிர்பார்த்துள்ளோம்.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் வயதை மேலும் ஒரு வருடத்தினால் குறைப்பதே இதன் நோக்கமாகும். அதன்படி, தொழில் வாய்ப்புகளுக்காக விண்ணப்பிப்பதில் பட்டதாரிகளாக இளம் வயதிலேயே பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறுவதும் அவர்களுக்கு முக்கியமானது என்பதைக் கூற வேண்டும். மேலும், முதலாம் தரத்திற்கு முன்னதாகவே சிறு குழந்தைகளுக்கு (Pre Grade) வகுப்புகளைத் தொடங்கவும் தயாராக உள்ளோம். இன்று பிறக்கும் குழந்தைகள் எதையும் மிக விரைவாகப் புரிந்து கொள்ளும் திறனைக் கொண்டுள்ளதை அடிப்படையாக வைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதும் சுமார் 100 வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ளன. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் கல்வித்துறையை மேலும் வலுப்படுத்தும் வகையில் வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை 120 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### தெற்காசியாவில் தடைகள் தாண்டி...

தமிழ் பேசும் பெண்களாவர். தொழில் முனைவோர், ஊடக நிர்வாகிகள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் உள்ளிட்ட மிக முக்கிய பதவிகளை வகிப்பதில் சிறந்த ஆளுமைகளை கிளிர் ஹேர் பாத் (#ClearHerPath) எனும் ஹேஷ்டெக்குடன் உலக வங்கி வெளியிட்டுள்ளது. தெற்காசியாவில் 4 பெண்களில் ஒருவர் மாத்திரமே பணிபுரிவதாக உலக வங்கி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பல மில்லியன் பெண்கள் வீட்டுக்கு வெளியே தொழில் செய்து தமக்கும் தமது குடும்பத்துக்கும் வருமானம் ஈட்டி, தமது சமூகம் மற்றும் பொருளாதாரத்துக்கு பங்களிக்கும் வாய்ப்பு பெறவில்லையென்பதே இதன் அர்த்தமெனவும், உலக வங்கி தெரிவித்துள்ளது.

பாரபட்சமான சட்டம் மற்றும் கொள்கைகள், கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகல் இல்லாமை, ஊதியம் இல்லாத வேலை, குடும்ப பொறுப்பில் நேரத்தை செலவழிக்கும் சுமை உள்ளிட்ட தடைகளை தெற்காசிய பெண்கள் தொழிலில் ஈடுபடும் போது எதிர்நோக்கின்றனர். ஆயினும் இந்தத் தடைகளை தகர்த்தெறிந்து, வேலை செய்ய விரும்பும் பெண்களுக்கான பாதையை உருவாக்க அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள், பணியிடங்கள், சமூகங்கள் மற்றும் குடும்பங்கள் பங்களிக்க முடியுமெனவும், உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

### ஜனாதிபதி ரணிலை ஆதரிக்க...

ஐக்கிய காங்கிரஸின் பொதுச் செயலாளர் சப்வான் சல்மான் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "எமது நாடு பொருளாதார ரீதியாக கடும் நெருக்கடியை எதிர்கொண்ட நேரத்தில் நாட்டை பொறுப்பெடுத்து பொருளாதரத்தை சீர்செய்ய எவரும் முன்வராத போது, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தனி மனிதனாக நின்று நாட்டை பொறுப்பெடுத்தார்.

இவ்வாறு எமது நாட்டை பொறுப்பெடுத்து, சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்று, கொஞ்சம் கொஞ்சமாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்தால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக சீர்செய்ய முடியுமென்பதை பாமர மனிதன் தொடக்கம் படித்தவர்வரை விளங்கி வைத்துள்ளனர். மேலும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற பின்னர், நாட்டில் எந்த இனங்களுக்கு இடையிலும் இனப் பிரச்சினை ஏற்படாமல் சமத்துவமாக நாட்டைக் கொண்டு செல்கின்றமையையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

எனவே இந்த வருடம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலில் எவ்வித நிபந்தனையுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க எமது கட்சி தீர்மானித்துள்ளது. எமது கட்சியுடன் உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படை தன்மையுடனும் ஐக்கிய தேசியக் கட்சி செயற்படும் போது, ஏனைய அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான சிறந்த முடிவுகளை எமது கட்சி எடுக்கும்" என்றார்.

### சர்வதேச மகளிர் தின...

தற்காலிக பெண்கள் பராமரிப்பு நிலையங்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பெண்கள் பணி அமைப்புகள் மற்றும் பெண்கள் அதிகார சபைகளின் யாப்பு என்பன, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்து வைக்கப்பட்டது. தற்காலிக பெண்கள் பராமரிப்பு நிலையங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் முச்சக்கரவண்டிகள், கணினிகள், அச்சு இயந்திரங்கள் என்பனவும் இதன்போது அடையாள ரீதியில் வழங்கி வைக்கப்பட்டன. அழகுக்கலை சார்ந்த கற்கைகளுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் இருந்து பெறப்படும் நுண் நிதிக் கடன்களின் சுமையிலிருந்து விடுபடுவதற்காக வழங்கப்படும் 'லிய சவிய' கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிகழ்வும் அடையாள ரீதியில் இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமைச்சர்களான சுசில் பிரேம்ஜயந்த, பவித்ரா வன்னியாரச்சி, மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான அனுப பஸ்குவல், சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, கொழும்பு முன்னாள் மேயர், உள்ளூராட்சி விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் ரோசி சேனாநாயக்க, வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரச மற்றும் அரசு சாரா பிரதிநிதிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகள், நாடளாவிய ரீதியில் இருந்து பெண்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### நானுஓயா ரதல்ல வீதியில்...

நோக்கிப் பயணித்த லொறியும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர் இவ்விபத்தை தொடர்ந்து லொறியின் சாரதியை கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் தலவாக்கலை மற்றும் கொட்டகலை பிரதேசங்களைச் சேர்ந்த 27, 28 வயதுடைய மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மக்களின் காணிகளை விடுவிக்குமாறு...

கோரிக்கை விடுக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் பொது மக்களால் பயன்படுத்தப்பட்ட காணிகள் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த காணிகளுக்குள் பொதுமக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், விவசாயம், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாக அமைச்சரிடம் ஆளுநர் எடுத்துரைத்தார். இதனால் குறித்த வர்த்தமானியை மீளப்பெற்று, மக்களுக்கான பயன்பாட்டு காணிகளை விடுவிக்குமாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விபரம் அடங்கிய அறிக்கையும் அமைச்சர் பவித்ராதேவி வன்னிஆராச்சியிடம் ஆளுநர் சமர்ப்பித்தார்.

### பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கு...

பிரபல பின்னணி பாடகி பி.சுசீலாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவிகள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பின்னணி பாடகி பி.சுசீலா தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், இந்தி, பெங்காலி, ஒடியா, சமஸ்கிருதம், துளு மற்றும் படகா உள்ளிட்ட பல்வேறு இந்திய மொழிகளில் கிட்டத்தட்ட 17,695 பாடல்களை பாடியுள்ளதுடன் சிங்களத் திரைப் படங்களுக்கும் பாடியுள்ளார்.

## இன்றைய பலன்கள்

**(09.03.2024)**



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**

**மேஷம்:**
பிள்ளைகள் மேற்படிப்புக்காகவும் வெளிநாடு செல்லும் வாய்ப்பிற்காகவும் முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். உத்தியோகத்தில் சிலருக்கு ஊதிய உயர்வின் காரணமாக இடமாற்றம் செய்யும் வாய்ப்பு அமையும்.

**ரிஷபம் :**
அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புக்கள் கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு மேல் இடத்தில் அனுகூலம் உண்டு.

**மிதுனம்:**
மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். நண்பர்களின் நன்மதிப்பை பெறும் வாய்ப்பு உண்டு. உத்தியோகம் தொழிலில் உயர்நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

**கடகம்:**
தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றலாமா என்று சிந்திப்பீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேல் இடத்திலிருந்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும்.

**சிம்மம்:**
புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் வருமானமும் அதிகரிக்கும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் கூடுதலாக உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கடன் சுமை குறைவது போல் தோன்றினாலும் ஒரு கடனை அடைக்க மற்றும் ஒரு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்:**
குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது குறை சொல்வார்கள். ஆடை ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வீடு மாற்றம், இடமாற்றம் திருப்தி அளிக்கும்.

**விருச்சிகம்:**
பயணங்கள் அதிகரிக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்ப்பர். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**தனுசு:**
வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணங்களால் நன்மை கிடைக்கும். பெண்வழி பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முன் வருவீர்கள்.

**மகரம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சம்பள உயர்வு பற்றிய தகவல் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:**
பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியை கைகூடும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்:**
அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அழகு பார்ப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சியில் அனுகூலம் உண்டு. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பாராட்டும் புகழும் கூடும்.

### நுகர்வோர் விவகார...

நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அமைச்சரின் அறிவித்தலுக்கமைய இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி திங்கட்கிழமை புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதிகார சபையின் தலைவர் சாந்த நிரியெல்ல உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் தமது இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஜனவரியில் ரூ. 14,880 கோடி...

2023 ஜனவரியில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ள இலங்கையரின் பணம் 437 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், இந்த ஆண்டு ஜனவரியில் அது 11.4 சதவீத அதிகரிப்பைக் காட்டுவதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது 2022 இல் குறிப்பிடத்தக்க மீட்சியைப் பதிவு செய்த பின்னர், அவ்வப்போது ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டாலும், வெளிநாட்டு பணியாளர்களிடமிருந்து பணம் அனுப்புவது பரந்த அடிப்படையிலான மேல்நோக்கிய போக்கைக் காட்டுவதாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

### IMF பிரதிநிதிகளுடன்...

ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளதோடு, அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் கூட்டுப் பொறுப்புக்கூறல் அவசியமானது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

### முன்னாள் மாகாண சபை உறுப்பினர்...

கொடுக்குமாறு கூறி தன்னிடம் வழங்கியதாகவும், இருவரும் ஒருவரையொருவர் அடையாளம் காணவில்லையெனவும் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார். திக்வெல்ல பிரதேசத்தை சேர்ந்த இச்சந்தேகநபர், மேலதிக விசாரணைக்காக லுணுகம்வெஹர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

### வணிகக் கப்பலிலிருந்த...

விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து Djibouti க்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

Djibouti இல் அங்கீகாரம் பெற்ற எதியோப்பியாவின் அடிஸ் அபாபாவில் உள்ள இலங்கைத் தூதரகம், காயமடைந்த இலங்கையரின் மருத்துவ சிகிச்சை மற்றும் மற்றைய இலங்கைக் குழு உறுப்பினர் பாதுகாப்பாக தங்குவதற்கு வசதியாக Djibouti இல் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சும் அடிஸ் அபாபாவில் உள்ள தூதரகமும் தற்போது நிலைமையை அவதானித்து வருவதாகவும், இலங்கையர் விரைவில் நாடு திரும்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொழும்பு நகரில் காற்று...

தரச் சுட்டெண் 158 (பி.எம்.2.5) ஆகும். இந்த தரச் சுட்டெண் மேலும் மோசமடையும் பட்சத்தில் கடுமையான அவதானம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுமெனவும், அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பை தவிர அக்குறணை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் காற்று மாசடையும் நிலைமை மோசமாக உள்ளதாகவும், வானிலை அவதான நிலைய அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

### வெடுக்குநாறி ஆலய பூசகர்...

சபை உறுப்பினர் ஒருவருமே நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரையும் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின விழிப்புணர்வு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட பெண்களின் உரிமைகள் சம்பந்தமாக பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன . இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் " தாயாக கரம் கொடுப்போம் " எனும் கருப் பொருளுக்கு அமைவாக சர்வதேச மகளிர் தின விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு லேக் வீதியில் உள்ள கட்சியின் அலுவலகத்திலிருந்து ஆரம்பமாகி நகரின் பிரதான வீதிகள் ஊடாகச் சென்று அரசடி வரை சென்றது .

இதன்போது கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இன்றைய இந்த நிகழ்விற்கு கட்சியின் பொதுச் செயலாளர் பூ . பிரசாந்தன் மகளிர் அணி உறுப்பினர்கள் , கட்சியின் பிரதிநிதிகள் , பொதுமக்கள் , எனபலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

விழிப்புணர்வு பேரணியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெருமளவிலான பெண்கள் கலந்து கொண்டதுடன் சர்வதேச மகளிர் தினத்தில் தங்களது உரிமைகள் பாதுகாப்பு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டதுடன் , பின்னர் தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மகளிரணி கௌரவமும் வழங்கப்பட்டது.

## மதுவரி ஆணையாளராக தர்மசீலன் கடமையேற்பு

(காரைதீவு குறூப் நிருபர்)



இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளராக (ஆதாயம்) தர்மசீலன் கடமையேற்றுள்ளார். மதுவரித்திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக 1986 இல் இணைந்து பணியாற்றினார். தொடர்ந்து அத்தியட்சகர்,உதவி ஆணையாளர் ஆகிய பதவி உயர்வுகளைப் பெற்று பின்னர் திணைக்கள தலைமையகத்தில் பிரதி மதுவரி ஆணையாளராக கடமையாற்றினார்.இறுதியாக மதுவரி ஆணையாளராக கடமையாற்றிய கனகசபை தர்மசீலன், மதுவரி ஆணையாளராக (ஆதாயம்) கடந்த வாரம் கடமையேற்றுள்ளார். இவ் வருடம் இறுதிப்பகுதியில் இவர் ஓய்வுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆதி சிவனாலயத்தில் சிவராத்திரி நிகழ்வு ஆரம்பம்



(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு நேற்று (8) வெள்ளிக்கிழமை காலை பூஜை வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பிரதேச செயலகம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. மாணவரிடையே குருத்தோலை பின்னுதல், நிறை முட்டிவைத்தல், கோலம் போடுதல் போன்ற பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளில் போட்டி நடைபெற்றது . அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.



தி/மூ/ மூதூர் அல்ஹிலால் மத்திய கல்லூரியின் 60 ஆவது ஆண்டு வைரவிழா நிறைவையொட்டி கல்லூரியின் பழைய மாணவர்களை பாடசாலையுடன் இணைக்கும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக பாடசாலை சமூகத்தினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்ட கரப்பந்தாட்டசுற்றுப்போட்டி இரவு நேரப்போட்டிட்டியாக மின்னொளியில் நடைபெற்றன. வெற்றிபெற்ற அணியினருக்கான வெற்றிக்கேடயங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

(படம் :தோப்பூர் தினகரன் நிருபர்)

## திருகோணமலையில் வன்னி ஹோப் நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகம் திறந்து வைப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

வன்னி ஹோப் நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய அலுவலகம் நேற்று வன்னி ஹோப் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சன் சிவஞானசுந்தரம் தலைமையில் நேற்று திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி ஹோப் நிறுவனத்தினுடைய செயற்பாடுகளை மேலும் கிழக்கு மாகாணம் பூராகவும் விஸ்தரிக்கும் நோக்குடன் கிழக்கு மாகாணத்திற்கான அலுவலகம் திருகோணமலை மாவட்டத்தில்



கோலாகலமாக திறந்த வைக்கப்பட்டது.

வன்னி ஹோப் நிறுவனம் பல்வேறு வகையான மனிதாபிமான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களையும் இன,மத, மொழி பிரதேச வேறுபாடு இன்றி வடக்கு, கிழக்கு மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், சிறப்பு அதிதிகளாக IMHO நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண தொழிற் பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி ஜீவிதன் சுகந்தினி,இலங்கைக்கான பணிப்பாளர் என். முரளிதரன்,வன்னி ஹோப் நிறுவனத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள், வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் , பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் , பாடசாலை மாணவர்கள் பயனாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தம்பலகாமம் பிரதேச செயலக மட்ட 48 ஆவது விளையாட்டு போட்டி





(தம்பலகாமம் குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான 48 ஆவது விளையாட்டுப் போட்டி கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலகப்பகுதியை உள்ளடக்கிய 42 கழகங்கள் பங்குபற்றின. விளையாட்டுப்போட்டியில் உதைப்பந்தாட்டம், கிரிக்கட், எல்லை, கபடி,கரப்பந்து, மெய்வல்லுனர் போட்டி போன்ற போட்டிகள் நடைபெற்றன. இப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான கேடயங்கள், சான்றிதழ்கள் போன்றன இறுதிப்போட்டி நிகழ்வுகளின் போது வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து சிறப்பித்ததுடன் வெற்றியீட்டிய அணிகள் வீரர்களுக்கான கேடயங்கள் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,நிர்வாக உத்தியோகத்தர் BUBL உடகெதர,மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எச்.விமலசேன,விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாணவர் கௌரவிப்பு விழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலாம் இடத்தை வென்ற காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலய மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் (07) பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ். ஐ.யாசீர் அறபாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் ஆசிரியர் யூ.எல்.எம்.என்.முபீன், முன்னாள் மத்திய கல்லூரி அதிபர் எம். சீ.எம்.ஏ. சத்தார், முன்னாள் பிரதேச கல்வி அதிகாரி எம்.ஏ.சி. எம்.பதுர்தீன் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டதுடன் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இந்நிகழ்வில் தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலாம் இடத்தை வென்ற மாணவர் மற்றும் தேசிய மட்ட புத்தாக்க போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டதுடன் தேசிய மட்ட சிதம்பரா போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள், சதுரங்க விளையாட்டுப்போட்டிகளில் மாகாண மட்ட போட்டிகளில் வெற்றிப் பெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்றிய மாணவிகளும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் போதைப் பொருள் சுற்றிவளைப்பு

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் நடவடிக்கைகளுக்கு அமைய வாழைச்சேனை செம்மன் ஓடை கிராமத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் போதைப்பொருள் சுற்றிவளைப் பொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, ஐஸ் போதைப்பொருளுடன் 23 வயது பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வாழைச்சேனை முகாமின் கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் கே. ஜி. எல். குமாரவுக்கு கிடைத்த தகவலின் படி இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, குறித்த கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் அதிகாரிகள் நடத்திய சோதனையில், 53 கிராம் 240 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 24 கிராம் 30 மில்லிகிராம் கேரள கஞ்சா, 2,950 போதை மாத்திரைகள் மற்றும் 86,000 ரூபாய் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.பின்னர், குறித்த சந்தேக நபரான பெண்ணும் போதைப்பொருளும் மேலதிக விசாரணைகளுக்காக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## மூதூர் பிரதேச செயலக மட்ட அனர்த்த முன்னாயத்த செயலமர்வு



( தோப்பூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலக மட்ட அனர்த்த முன்னாயத்த செயலமர்வு மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வில் கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அனர்த்த முன்னாயத்த நிகழ்வுகள் சம்பந்தமான முன்னாயத்த திட்டத்தை தயாரித்தனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட் அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் மற்றும் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இதற்கு வளவாளர்களாக கலந்து கொண்டனர்.



மூதூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட இக்பால் நகர் கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு அவர்களின் சிறு தொழில்களை முன்னேற்றும் நோக்குடன் சிறுகடைகள் வைத்து நடாத்துவதற்குத் தேவையான கடைக்குரிய பொருட்கள் இலவசமாக பயனாளிகளிடம் வழங்கிவைக்கப்பட்டன.

(படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

## மகளிருக்கு வாழ்வாதார உதவி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

“அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" எனும் தொனிப் பொருளில் இவ்வருடம் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிருக்கான வாழ்வாதார கடன் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழ், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கல்லாறு சமுர்த்தி வலயத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 08 பயனாளிகளுக்கு சுமார் 1400000 ரூபாவும், மாங்காடு சமுர்த்தி வங்கியினால் தெரிவுசெய்யப்பட்ட 17 பயனாளிகளுக்கு சுமார் 1495000 ரூபாவும், சுயதொழில் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்டன.

## கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் அன்னமலை பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயம்

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் சகீலா இஸ்ஸடீன், பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் அண்மையில் அன்னமலை பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலை நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

இதன்போது PSSP திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் அமையப்பெறவுள்ள மருந்தகம் தொடர்பாகவும் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் கலந்துரையாடிய பணிப்பாளர் புதிய கட்டடத்தில் மருந்தகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, களஞ்சியசாலை, விடுதி மற்றும் மருந்தகத்தினையும் பார்வையிட்டனர்.



# நகர்வலம்



## நாச்சியாதீவில் கட்டப்பட்ட பாலம் மக்கள் பாவனைக்காக திறந்து வைப்பு



நாச்சியாதீவு அநுராதபுரம் பிரதான வீதியில் புதிதாக கட்டப்பட்ட பாலம் அண்மையில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பாலத்தை முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். எம். சந்திர சேன திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித், திறப்பனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அன்வர் சதாத் (பஸ்மி) உட்பட சமய தலைவர்கள் பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துக்கொண்டிருந்தனர்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் கடன் உதவி திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு சுமார் 15 பாலங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அநுராதபுரம் மாவட்டத்துக்குட்பட்ட நாச்சியாதீவு பிரதேசத்திற்கு இரண்டு பாலங்கள் கிடைத்துள்ளன.

அதன்படி, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு பாலம் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளதுடன், நாச்சியாதீவு வில்லுப்பாதையில் இரண்டாவது பாலத்தின் நிர்மாணப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் ஊடாக வெளியேற்றப்படும் அதிகரித்த நீர் இப்பாலத்தின் ஊடாக வெளியேற்றப்படும் சந்தர்ப்பங்களில் இப்பாதையில் போக்குவரத்து தடைப்படும்.

எனினும், இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டதும் இத்தடை நீங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## அநுராதபுரத்தில் 14 வயதுடைய பாடசாலை மாணவி பாலியல் துஷ்பிரயோகம்

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

கலென்பிந்துனுவெவ பகுதியில் 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் அச்சுறுத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடுடொன்று கிடைத்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாணவி மேலதிக வகுப்புக்காக அநுராதபுரம் சென்றிருந்தபோது, அங்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரால் பலமுறை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

## பழம்பெரும் சிங்கள நடிகை காலமானர்!



பழம்பெரும் சிங்கள நடிகை ரம்யா வணிகசேகர நேற்று (08) காலமானார். இவர் பத்திரிகையாளராகவும், வானொலி செய்தி தொகுப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். ரம்யா வணிகசேகர காலமாகும் போது அவருக்கு வயது 73 ஆகும்.

## 4 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு

நான்கு வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

பால் மா , காய்ந்த மிளகாய் ,வெள்ளை பச்சை அரிசி, வெள்ளை சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 400 கிராம் LSL பால் மா 935 ரூபாவாகவும், ஒரு கிலோ காய்ந்த மிளகாய் 1,175 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளை பச்சை அரிசி 195 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனி 272 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விலை குறைப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் அமுலுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





உலக சைவ பேரவை அமைப்பின் குழு சார்பாக எஸ். தனபாலாவின் ஏற்பாட்டில், பம்பலபிட்டி ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய வளாகத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்ட கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இந்நிகழ்வில் விக்ரமசிங்க மற்றும் ஆலய அறங்காவலர்கள் கலந்துக்கொண்டுள்ளமையையும் படங்களில் காணலாம்.

## ஷெய்க்ஹ்குன்நஜா முஹாஜிரீன் ஆலிமின் மறைவு ; இலங்கை சர்வமத தலைவர்கள் இரங்கல்











ஷெய்க்ஹ்குன்நஜா முஹாஜிரீன் ஆலிமின் மறைவு ஆன்மீக உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என இலங்கை சர்வமத தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நுழாருல் காதிரிய்யா மற்றும் அன்நஜா அரபுக்கல்லூரிகளின் அதிபரும் ஆன்மீக அறிஞருமான ஷெய்க்ஹ்குன்நஜா முஹாஜிரீன் ஆலிம் கடந்த மாதம் 25 ஆம் திகதியன்று காலமானர்.

இவரின் மறைவுக்கு பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சர்வ மதத் தலைவர்களான, கலாநிதி சாஸ்த்ரபதி கௌரவ கலகம தம்மரன்சி நாயக்க தேரர், கலாநிதி சிவ ஸ்ரீ பாபு சர்மா குருக்கள், அல்ஹாஜ் அஷ்ஸெய்யித் கலாநிதி ஹசன் மௌலானா அல்காதிரி மற்றும் கலாநிதி நிஷான் குரே பாதிரியார் ஆகியோரே தங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளர். குறித்த இரங்கல் செய்தியில் மதத்தலைவர்கள் தெரிவித்துள்ளதாவது, மறைந்த ஷெய்க்ஹ்குன்நஜா, சமய சகவாழ்வு மற்றும் சர்வமத ஒற்றுமையை மதிக்கும் சமயத் தலைவராகவும், சமயங்கள் மற்றும் இன ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் அவர் இலங்கையில் ஆற்றிய சேவைகளைப் பாராட்டத்தக்கது. மாண்புமிகு அமைதியை வலுப்படுத்த பல்வேறு வழிகளில் அவர் செயற்பட்டவர்.

தன்னிடம் கல்விகற்ற ஆயிரக்கணக்கான ஆலிம்களை "தனது மாணவர்களை" மத நல்லிணக்கத்தை பேணி சுகவாழ்வுடனும் இலங்கையிலுள்ள சகல மதத்தாருடனும், இனத்தாருடனும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான பல வழிகளையும் கற்றுக்கொடுத்த தலைசிறந்த ஒரு ஆன்மீக ஆசானாக திகழ்ந்துள்ளார் என்பது அவருடைய கடந்தகால வரலாற்றில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. அவருடைய மகிமையான செயல்களில், மாண்புமிகு இறைதூதர் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) நபியவர்களுடைய மாபெரும் நற்குணம் நிறைந்த வழிகாட்டலை நாம் காண்கிறோம். மேலும் இஸ்லாமிய மதப் பெரியார் என்ற வகையில், இன அமைதி மற்றும் சர்வமத ஒற்றுமைக்காக வேண்டிய பல பிரச்சினைகளை தீர்த்து வைத்துள்ளார். ஆன்மீக அறிஞர் ஷெய்க்ஹ்குனநஜா முஹாஜிரீன் ஆலிமின் மறைவு ஆன்மீக உலகிற்கு மாபெரும் பேரிழப்பு என தெரிவித்தனர்.

## பலஸ்தீனர்களுக்காக துவா பிரார்த்தனை!

## பலஸ்தீனத்துக்கான இலங்கை தூதுவரை சந்தித்த பேருவளை அப்ரார் கல்வி நிலைய உறுப்பினர்கள்



பலஸ்தீனத்துக்கான இலங்கை தூதுவர் கலாநிதி சுஹைர் முஹம்மத் ஹம்தல்லாஹ் செயிட்டுக்கும், பேருவளை அப்ரார் கல்வி நிலைய உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள பலஸ்தீன தூதரகத்தில் நடைபெற்றது.

பேருவளை அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரான பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பானது, அதன் தலைவர் எம்.நிஸாம் ஹாஜியார் தலைமையில் நடைபெற்றது.


இதன்போது, இஸ்ரேல் காசா தாக்குதலினால் சஹீதான பலஸ்தீனவாசிகளுக்கும் காயமுற்று சிகிச்சை பெற்றுவரும் பொது மக்களுக்கு துவா பிரார்த்தனை புரிந்ததுடன் ஆழ்ந்த அனுதாபங்களும் தெரிவிக்கப்பட்டன.

இதன்போது, இலங்கை வாழ் மக்கள், பலஸ்தீன மக்கள் மீது கொண்டுள்ள பாசம், சுதந்திர பலஸ்தீனம் உருவாக வேண்டி வழங்கும் ஆதரவு மற்றும் அவ்வப்போது வழங்கும் உதவிகள் குறித்தும் தூதுவர் நன்றி தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில், அப்ரார் கல்வி நிலைய முன்னால் தலைவரும் ஓய்வுபெற்ற முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான அல்ஹாஜ் ஏ.டப்ளியூ.எம்.அஜ்வாத் பேருவளை முன்னாள் நகரபிதா அல்ஹாஜ் எம்.மஸாஹிம் முஹம்மத் உட்பட உறுப்பினர்கள் மற்றும் களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன உறுப்பினர்கள் சிலரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

## வெள்ளத்தையில் திடீரென தாழிறங்கிய பிரதான வீதி!





காலி வீதி வெள்ளவத்தை ஸ்டேஷனுக்கருகில் நடு வீதியில் ஏற்பட்ட திடீர் தாழிறக்கம் காரணமாக வாகன போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால், காலி வீதியூடனான போக்குவரத்தை ஒருவழி பாதையாக பொலிஸார் மட்டுப்படுத்தியுள்ளனர். இந்நிலையில், கொழும்பு நோக்கி பயணிக்கும் வாகன சாரதிகளுக்கு மாற்று வழியாக மரைன் டிரைவ் பாதையை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலன்னறுவையில் தொல்பொருட்கள் தோண்ட பயன்படுத்திய கருவிகளுடன் ஐவர் கைது

பொலன்னறுவை வலேகடை பிரதேசத்தில் உள்ள தோட்டமொன்றில் தொல்பொருட்களை தோண்டுவதற்கு பயன்படுத்திய கருவிகள் மற்றும் நவீன கார் என்பனவற்றுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், ஏனைய சந்தேகநபர்கள் பண்டாரவளை, கலேவெல, கந்தளை, மீரிகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.இவர்கள் 30 முதல் 50 வயதுக்குட்பட்டவர்கள் என பொலன்னறுவை குற்றப் புலனாய்வு பிரிவின் கட்டளைத் தளபதி ஏ.டி. பண்டார தெரிவித்தார். சந்தேகநபர்கள் சில வருடங்களுக்கு முன்னர் இந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று தொல்பொருள் அகழ்வில் ஈடுப்பட்டுள்ளதாகவும், மீண்டும் இரண்டாவது முறையாகவும் ஒருவாரத்திக்கு முன்னர் புதையல்களை தேடுவதற்காக காரொன்றில் வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் நீர் திட்டம் அமைப்பதற்காக கிணறு வெட்டுவதாக கூறி சந்தேகநபர்கள் தோண்டியுள்ளனர். இதன்போது கூர்முனை, இரும்பு கம்பிகள், தண்ணீர் மோட்டார்கள், கம்பிகள் போன்ற பல உபகரணங்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

பூமிக்கு அடியில் பொருட்கள் உள்ளதா எனப் பார்ப்பதற்காக ஸ்கேனிங் இயந்திரத்துடன் கைது செய்யப்பட்ட 46 வயதுடைய சந்தேகநபர், 1999ஆம் ஆண்டு இயந்திரமொன்றை உருவாக்கி ஜனாதிபதி விருதைப் பெற்ற பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமிக்கு அடியில் உள்ள அனைத்து பொருட்களும் கமராவாகும் வகையில் இயந்திரமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அவர் உருவாக்கிய இயந்திரத்திற்கு மற்றுமொரு கமெராவொன்றும் பொருத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலன்னறுவை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலன்னறுவை பிரதேச புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

## கணவன் – மனைவிக்கு இடையில் வாக்குவாதம்: மாமனார் கொலை

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

ஹொரவப்பொத்தானை பொலிஸ் பகுதியில் கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை சமாதானப்படுத்த சென்ற மாமனார் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

ஹொரவப்பொத்தானை முக்கரவெவ பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய முதியவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.உயிரிழந்தவர், அவரது மகளுக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை சமாதனப்படுத்த முயன்றபோது, மருமகனால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றர்.

குறித்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவப் பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




அன்று சங்கீத நாடக அகடமி விருது பெற்ற, ஜுடோ கலைஞர் பழனிவேல், வீணை கலைஞர் திருமதி ஜெயந்தி குமரேஷ், பரதநாட்டிய கலைஞர் திருமதி ஊர்மிளா சத்யநாராயணன், வாய்ப்பாட்டு கலைஞர் மஹாராஜபுரம் இராமச்சந்திரன் மற்றும் மிருதங்க கலைஞர் நெய்வேலி நாராயணன் ஆகியோரை தில்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன், செயற்குழு உறுப்பினர்கள் திருமதி உஷா வெங்கடேசன், ஜெ. சுந்தரேசன் முன்னாள் செயற்குழு உறுப்பினர் கே. முத்துசுவாமி ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வு

*மன்னார் குறூப் நிருபர்*



வரலாற்றுப் புகழ் பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 2024ஆம் ஆண்டுக்கான மகா சிவராத்திரி நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

நேற்றைய தினம் உலகம் முழுவதும் இருந்து வருகை தந்த சிவ பக்தர்கள் மன்னார் பாலாவியில் நீராடி பாலாவி தீர்த்த நீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தினுள் உள்ள மகா சிவலிங்கத்திற்கு நீர்வார்த்து நெய் விளக்கு ஏற்றி வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக்கடனைச் செலுத்தினர்.

அத்துடன் சிவராத்திரி நிகழ்வுகளை முன்னிட்டு திருக்கேதீஸ்வர திருப்பணி சபையின் ஏற்பாட்டில் பல்வேறு பட்ட இந்து கலாசார நிகழ்வுகள் அறநெறி சொற்பொழிவு நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து சுமார் எட்டு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் நேற்றைய சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 11 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகத்தில் தந்தை கைது

*ஓமந்தை விஷேட நிருபர்*

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த 34 வயதான தந்தையொருவர் தனது 11 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நேற்று இரவு முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கூலித்தொழிலாளியான தந்தை கடந்த மூன்று வருடங்களாக தனது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, பாதிக்கப்பட்ட சிறுமி தந்தையின் கொடூர செயலை தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தாயார் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் கைது செய்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட சிறுமியை முல்லைத்தீவு மாவட்ட வைத்திசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

# ஐஸ்கிறீம் வியாபாரியை கலைத்த பொலிஸார்

பொதுமக்கள் குழப்பம்

*ஓமந்தை விசேட நிருபர்*



வெடுக்குநாறிமலையில் ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரியொருவரை பொலிஸார் கலைத்தமையால் ஆலய வளாகத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

வெடுக்குநாறிமலையில் நேற்றையதினம் சிவராத்திரி வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்ற பொதுமக்களுக்கு பொலிஸாரால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிலையில் பொதுமக்களுக்கு குடிதண்ணீரை கொண்டு சென்ற நீர் தாங்கி பொலிஸாரால் இடைவழியில் நிறுத்தப்பட்டது.

இதனால் 5 கிலோமீற்றர் தூரம் நடந்துசென்ற பொதுமக்கள் நீர் இன்றி அசௌகரியத்தை எதிர் கொண்டனர்.

இதேவேளை ஆலய வளாகத்தில் ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரியொருவரை பொலிஸார் விற்பனையில் ஈடுபட வேண்டாம் என தெரிவித்து ஆலய வளாகத்தை விட்டு அகற்றினர். இதனால் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டது.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்று இணையத்தில் அரங்கேறுகின்றன

*சாவகச்சேரி விசேட நிருபர்*

பெண்கள் சார்ந்து எமது நாட்டில் ஏராளமான சட்டங்கள் எழுத்தில் உள்ள போதிலும் நாளுக்கு நாள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் புதிய வடிவங்களில் அரங்கேற்றப்படுவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

பெண்களைப் பாதிக்கும் ஒவ்வொரு விடயம் சார்ந்தும் எமது நாட்டில் சட்டங்கள் உள்ளன.

பெண்களை அதிகம் பாதிக்கும் குடும்ப வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம்,பெண்களை உடல்,உள மற்றும் உணர்வு ரீதியான பாதிக்கும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம்,பெண்களுடைய தொழில் உரிமைகளை பாதுகாக்கும் சட்டம்,நிகழ்நிலை குற்றச்செயல்களில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் என ஒவ்வொரு விடயத்திற்கும் சட்டங்கள் உள்ளன.

கடந்த காலங்களில் வீடுகளில், தொழில் புரியும் இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நேரடியாக நிகழ்த்தப்பட்டன. ஆனால் இன்று இணைய வழிகளில் நிகழ்நிலையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் புதிய வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றன. பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் செயற்பாட்டில் உள்ள போதிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்பாட்டிற்குள் இல்லை.

சமூகமானது பெண் சார்ந்த தனது மனநிலையை எப்போது மாற்றிக்கொள்கின்றதோ அப்போதே பெண்கள் உரிமையை பெற முடியும். இந்த மாற்றம் ஒரே இரவில் நடந்து விடப் போவதில்லை.ஆனால் ஒவ்வொருவரும் பெண் சார்ந்த தனது எண்ணங்களை திருத்திக்கொள்ள வேண்டும்.அவ்வாறு நாளுக்கு நாள் எமது மனங்களில் ஏற்படுகின்ற மாற்றமே பெண் விடுதலையை பெண் தலைவர்களை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## புதுக்குடியிருப்பில் மென்பந்து இறுதிப் போட்டி



*முல்லைத்தீவு குறூப் நிருபர்*

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தெரிவு செய்யப்பட்ட 06 கழகங்களுக்கிடையிலான 05 பந்து பரிமாற்றம் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டி நேற்று நடைபெற்றது. AU Lanka நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு புதுக்குடியிருப்பு பிரதேச சபை மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. இறுதி சுற்றுப்போட்டியில் சுதந்திரபுரம் இளைஞர் அணிக்கும் புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்துக்கிடையிலான போட்டி நடைபெற்றது. கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் முதலிடத்தினை பெற்றுக் கொண்டது. சிறந்த ஆட்ட நாயகனாக கோம்பாவில் விக்னேஸ்வரா விளையாட்டு கழகத்தின் குமாரசாமி சதுஜனன் பெற்றுக் கொண்டார். தொடர் ஆட்ட நாயகனாக சுதந்திரபுரம் இளைஞர் அணியின் திலக் தெரிவு செய்யப்பட்டார். அதி கூடிய இலக்குகளை வீழ்த்தியவராக கோம்பாவில் விக்னேஸ்வரா அணியின் திலகன் தெரிவு செய்யப்பட்டார். இத்தொடரில் மூன்றாமிடத்தை மூங்கிலாறு அணி பெற்றுக் கொண்டனர்.

## சர்ச்சைக்குரிய புத்தர் சிலை அகற்றம்!

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையொன்று அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்தியமையால் அது அங்கிருந்து தற்போது அகற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சுழிபுரம் சவுக்கடி பிள்ளையார் ஆலயத்திற்கு பின் புறமாக உள்ள அரச மரத்தின் கீழ் புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்தது. அப்பகுதி கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டு இருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகித்த நிலையில்,புத்தர் சிலையை அடுத்து விகாரை தோற்றம் பெறலாம் என அச்சப்பட்டனர். இதுதொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி பேசுபொருளானது. எனினும் புத்தர் சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பயணித்த வாகனம் விபத்து

*(மாங்குளம் குரூப் நிருபர்)*

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பயணித்த வாகனம் முள்ளிவாய்க்கால் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இவ்விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த கார் முள்ளிவாய்க்கால் பகுதியில் சென்றுக் கொண்டிருந்த போது காரின் சில்லில் காற்று குறைவடைந்ததன் காரணமாக திடீரென வீதியை விட்டு விலகி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து ஏற்படும் போது அவரது துணைவியாரும் காரில் பயணித்திருந்தார். எனினும் காரில் பயணித்த எவருக்கும் எவ்விதமான சேதமும் ஏற்படவில்லை.



மாத்தளை மாசிமக மகோற்சவத்தை முன்னிட்டு மாத்தளை வடிவேலன் எழுதிய “மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும் மலையகத் தமிழரும்” என்ற நூலின் பிரதிகள் அன்னை முத்துமாரியிடம் அர்ச்சித்து நூற்படையல் செய்து ஆலய தலைவர் விக்னேஷ்வரன் சர்வானந்தா வெளியிட்டு வைப்பதையும் ஆன்மீக சமூக செயற்பாட்டாளர் எச்.எச்.விக்கிரமசிங்க, தொழிலதிபர் தனுஷ்கோடி இராஜேந்திரன் அவர்களிடம் வழங்குவதையும் இந் நிகழ்வில் கலந்துக் கொண்ட சைவப்பெரியார் சு.புண்ணியசீலன், சுப்பையா ஜெயகுமார் உட்பட அம்பிகை அடியார்களையும் படங்களில் காணலாம்.

# மலைச்சாரல்

சிவனொளிபாத மலை பருவகாலம்

## 3 மாதங்களில் 3 மெற்றிக்தொன் பிளாஸ்டிக் போத்தல்கள் மீட்பு

நல்லத்தண்ணி வழியாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரிகர்களால் கைவிடப்பட்ட சுமார் மூன்று மெற்றிக்தொன் பிளாஸ்டிக் போத்தல்களை கேசரித்துள்ளதாக மஸ்கெலியா பிரதேச சபை அறிவித்துள்ளது.



இவ்வருடம் சிவனொளிபாத மலை பருவகாலம் தொடங்கி மூன்று மாதங்களுக்குள் குறித்த பிளாஸ்டிக் போத்தல்கள் சேகரிக்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த வழியூடாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் யாத்திரிகர்கள் கொண்டுச் செல்லும் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களை அப்புறப்படுத்துவதற்காக குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் எஸ். ராஜவீரன் தெரிவித்துள்ளார்.

# சிறுத்தையின் சடலம் மீட்பு ; ஒருவர் கைது

*தலவாக்கலை குறூப் நிருபர்*

தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்திலுள்ள வீடொன்றுக்கருகில் உயிரிழந்த நிலையில் காணப்பட்ட சிறுத்தையொன்றின் சடலத்தை தலவாக்கலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சிறுத்தையின் சடலம் நேற்று முன்தினம் (08) மீட்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தில், வீடொன்றுக்கருகில் உயிரிழந்த நிலையில் சிறுத்தை ஒன்று கிடப்பதாக, தலவாக்கலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சிறுத்தையை மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

உயிரிழந்த சிறுத்தையின் சடலம் மரண பரிசோதனைக்காக இரந்தனிகல வனவிலங்கு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை, நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.



## மயங்கி விழுந்ததில் மாணவன் மரணம்!

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

கலவான பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் மயக்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

கலவான மீபா கம பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் பதின்மூன்று வயதுடைய மாணவனே இவ்வாறு மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மயங்கி விழுந்த மாணவனை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுச்சென்றபோதும் அவர் உயிரிழந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுவிட்சர்லாந்து ஆசை காட்டி பணம் பறித்த நபர் கைது

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

வெளிநாட்டில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 785,000 ரூபா பண மோசடி செய்த நபர் ஒருவரை பலாங்கொடை பொலிஸார் நேற்று முன்தினம் (8) கைது செய்துள்ளனர்.

பலாங்கொடை – மெந்தகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 41வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த, சந்தேகநபர் சுவிட்சர்லாந்தில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நபரொருவரிடமிருந்து 785,000 ரூபா பணம் பெற்றக்கொண்டு ஏமாற்றியுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், 25 பேரிடம் குறித்த சந்தேகநபர் பணம் பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மலையக ஆலயங்களில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. அதன்படி ஹட்டன் மல்லியைப்பூ லிங்கநகர் ஸ்ரீ ராஜராஜேஸ்வர ஆலயத்தில் சிவலிங்கப்பெருமானுக்கு பாலாபிஷேகம் இடம்பெற்று விசேட பூஜை வழிபாடுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

தினகரன் வர்த்தக உலா
shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# நவலோக மருத்துவமனை தன் பங்குதாரர்களுக்கு தெளிவூட்டல்




பல்வேறு பொய்யான பிரசாரங்களுக்கு மத்தியில் நவலோக மருத்துவமனை தனது நிதி ஸ்திரத்தன்மையை அதன் பங்குதாரர்கள் உட்பட இலங்கை சமூகத்திற்கு தெளிவுபடுத்துகிறது.

இலங்கையின் முன்னோடி மற்றும் மிகப்பெரிய தனியார் மருத்துவமனை சங்கிலியான *New Nawaloka Medical Center (Pvt) Ltd* ஐ ஹட்டன் நேஷனல் வங்கியால் பரேட் சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவதைத் தடைசெய்யும் இடைக்காலத் தடை உத்தரவை பெப்ரவரி 28, 2024 அன்று, மேன்முறையீட்டு நீதிமன்றம், வழங்கியது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் நிதி ஸ்திரத்தன்மை தொடர்பில் பல்வேறு தரப்பினரால் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டபொய்ப்பிரசாரங்கள் தொடர்பில் மருத்துவமனை குழுமத்தின் உயர்மட்ட நிர்வாகத்தின் கவனம் திரும்பியுள்ளது. மருத்துவமனை குழுமத்தின் நிதி ஸ்திரத்தன்மை குறித்த ஆதாரமற்ற கூற்றுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும், இலங்கையின் முன்னோடி மற்றும் முன்னணி தனியார் மருத்துவமனை குழுவாக, இலங்கை மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் நல்வாழ்வுக்கான அதன் உன்னத தேசிய பணியை தொடர்வதே அதன் முக்கிய நோக்கமாகும் என்றும் நவலோக்க மருத்துவமனை குழு தெரிவித்துள்ளது.

கடந்த 39 வருடங்களில் நவலோக்க மருத்துவமனை குழுமம் இலங்கை வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் நம்பகமான தனியார் மருத்துவமனை வர்த்தக நாமமாக மாற முடிந்தது. நவலோக்க மருத்துவமனை குழுமத்தால் சர்வதேச தரத்திலான சிகிச்சை வசதிகள் மற்றும் மிகவும் சிக்கலான சிகிச்சை முறைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்திற்கு எதிராக சில தரப்பினர் ஆதாரமற்ற பொய்யான கூற்றுக்களை தொடர்ந்து பரப்பி வருகின்ற போதிலும், நவலோக்க மருத்துவமனைகள் குழுமம் அதன் நிதி ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே முன்னெடுத்துள்ளதாக அதன் பங்குதாரர்களுக்கு அறிவித்துள்ளதாக நவலோக்க மருத்துவமனை குழு மேலும் தெரிவித்துள்ளது. எனவே, நவலோக்க மருத்துவமனை குழுமம் தனது நிதிக் கடப்பாடுகளை உரிய முறையில் நிறைவேற்றி மருத்துவமனை குழுவின் செயற்பாடுகளை எவ்வித இடையூறும் இன்றி நடத்தும் திறனைக் கொண்டுள்ளது என மேலும் வலியுறுத்துகிறது.

# Oceanswell – Greenpeace South Asia இணைந்து முன்னெடுத்த மூலையூட்டிகளின் ஆய்வு!

Greenpeace South Asia மற்றும் இலங்கை கடல்சார் பாதுகாப்பு அமைப்பான Oceanswell ஆகியன, Greenpeace நிறுவனத்தின் முதன்மையான Rainbow Warrior கப்பல் மூலம், இந்து சமுத்திரத்தின் ஆழ்கடலில், டொல்பின்கள், திமிங்கிலங்கள் உள்ளிட்ட முலையூட்டிகளின் (Cetacean) வெளிப்பாடு மற்றும் ஒலியியல் ஆய்வுகளை வெற்றிகரமாக நிறைவு செய்ததைத் தொடர்ந்து, கொழும்பு திரும்பியுள்ளன. புகழ்பெற்ற Cetacean ஆராய்ச்சியாளரும் Oceanswell நிறுவுனருமான Dr. Asha de Vos தலைமையில் Oceanswell ஐச் சேர்ந்த இலங்கையின் இளம் குழுவினருடன் இணைந்து இந்த விஞ்ஞான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.



10 நாட்களில் மொத்தமாக 2,431 கி.மீ.களை உள்ளடக்கியதாக, இலங்கையின் கிழக்கு மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு தெற்கே உள்ள சர்வதேச கடல் பகுதியில் அமைந்துள்ள Ninety East Ridge இன் வடக்கு பகுதியில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. இந்த 10 நாட்களில் உயிரினங்களின் வெளிப்பாடு மற்றும் ஒலியியல் அம்சங்கள் மூலம் கடலின் தொலைதூரப் பகுதியில் முலையூட்டிகளின் பன்முகத்தன்மையை ஆராய்ந்து ஆவணப்படுத்துவதே இந்த ஆய்வின் இலக்காக இருந்தது. இந்த ஆய்வுக் குழு பகல்நேர காட்சி ஆய்வுகளை 24 மணி நேர ஒலியியல் ஆய்வுகளுடன் இணைந்தாக, அப்பகுதியில் காணப்படும் Cetacean வாழ்க்கையின் வரைபடத்தை உருவாக்கியது. Spinner, Spotted, Striped, Bottlenose ஆகிய குறைந்தபட்சம் 4 வகையான டொல்பின்கள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, Oceanswell இன் ஒலியியல் தரவு பகுப்பாய்வானது தற்போது வரை நிலுவையில் உள்ளது.

இது பற்றி Dr Asha de Vos தெரிவிக்கையில், "இந்து சமுத்திரத்தின் குறித்த பகுதியில், பிரத்தியேகமான Cetacean காட்சி மற்றும் ஒலியியல் ஆய்வு நடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும். இந்து சமுத்திரத்தில் இந்த முலையூட்டிகள் தொடர்பில் இன்னும் ஒப்பீட்டளவில் சரியாக அறியப்படவில்லை என்பதால், இந்த இரண்டு வாரங்களில் நாம் சேகரித்த தரவுகள், நமது அறிவுத் தளத்திற்கு பெரிதும் பங்களிக்கும் என்பதோடு, எமது பெருங்கடலில் மிகவும் தொலைதூர பகுதிகள் எவ்வாறு அமையும் எனும் தோற்றத்தை இதன் மூலம் அறியலாம். நல்ல செய்தி என்னவென்றால், குறைந்தது நான்கு வகையான டொல்பின்களின் பல கூட்டங்களை நாம் பார்வையிட்டதோடு, அவற்றின் ஒலிகளை நாம் கேட்டோம். அத்துடன் பெரும்பாலான கூட்டங்களில், சிறிய குட்டிகளையும் நாம் அவதானித்தோம். இனப்பெருக்கத்திற்கு அல்லது குட்டிகளை ஈனுவதற்கு உகந்த இடமாக இந்த பகுதி காணப்படுகின்றது என்பதை இது காட்டுகிறது. எமது ஆராய்ச்சி மற்றும் உயிரின பாதுகாப்பு தொடர்பான முயற்சிகளில், நீண்ட கால அடிப்படையில் விசேட கவனம் செலுத்துவது எவ்வாறு என்பதைப் புரிந்து கொள்வதற்கு, இந்த இயற்கையின் ஆய்வு முக்கியமானதாகும். உள்நாட்டு கடல்களுக்கு அப்பால் ஆழ் கடல்களுக்குச் சென்று இந்த பயணத்தை வெற்றிகரமாக முடிக்க, Rainbow Warrior கப்பல் பெரிதும் உதவியுள்ளது. இந்து சமுத்திரத்தின் குறித்த பகுதியில் என்ன நடக்கிறது என்பதை உண்மையில் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக, நீரில் நாம் செலவிட்ட காலத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்ய ஆரம்பிக்கவுள்ளோம் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.

Greenpeace South Asia பிரசார முகாமையாளர் Avinash Chanchal Kumar இங்கு கருத்துத் தெரிவிக்கையில், "இந்து சமுத்திரமானது, நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் சூழல் தொகுதிகளின் ஆச்சரியமூட்டும் உயிர்ப் பல்வகைத் தன்மையின் தாயகமாகும். இந்தக் கடலானது, மிக வேகமாக வெப்பமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இங்கு வாழும் உயிர்ப் பல்வகைமையின் தன்மையைப் புரிந்துகொள்வது அவசியமாகும். இப்பிராந்தியத்திலுள்ள காலநிலையின் உண்மையான நிலைமைகளை நன்கு புரிந்துகொள்ள, அப்பகுதியைச் சேர்ந்த சமூகங்கள் மற்றும் நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுவதை உறுதிசெய்வது, Greenpeace South Asia ஆகிய எமது முயற்சிகளில் ஒன்றாகும். இந்த ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள், இங்குள்ள கடல் உயிர்ப் பல்வகைமை பெருக்கத்தை நன்றாகப் புரிந்துகொள்ள உதவும் என்பதில் நாம் ஆர்வமாக உள்ளோம்." என்றார்.

# இலங்கையில் தனது செயற்பாடுகளை பலப்படுத்தும் Socomec

ஒரு நூற்றாண்டு பழமையான பிரான்ஸ் பன்னாட்டு நிறுவனமும், குறைந்த மின்னழுத்த மின்சார முகாமைத்துவ தொகுதிகளில் உலகளாவிய முன்னோடியுமான Socomec, இந்தியாவுக்கான அதன் பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, இலங்கையில் தனது செயற்பாடுகளின் பாரிய விரிவாக்கத்தை பெருமையுடன் அறிவித்துள்ளது. எதிர்வரும் மூன்று வருடங்களில் இலங்கையில் தனது பிரசன்னத்தை மும்மடங்காக அதிகரிப்பதற்கான அர்ப்பணிப்புடன், அதன் பொது முகாமையாளராக Suhard Amit அவர்களை நிறுவனம் நியமித்துள்ளது. 25 ஆண்டுகளுக்கும் மேலான பல்வேறு துறைசார் அனுபவங்களைக் கொண்ட அனுபவமிக்க நிபுணரான Suhard Amit, இலங்கையை தளமாகக் கொண்டு பங்களாதேஷ், மாலைதீவு, பூட்டான், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள சந்தைகளுக்கான நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் பணியை, மேற்கொள்வார்.



மின்சக்தி மாற்றீடு தொடர்பான (power conversion) அதிநவீன தீர்வுகளை வழங்குவதில் Socomec அர்ப்பணிப்புடன் திகழ்கின்றது. முக்கிய பயன்பாடுகளுக்கான Power Switching மற்றும் Monitoring சாதனங்களை வழங்குவதோடு, வாடிக்கையாளர் திருப்திக்கு முன்னுரிமை அளிக்கின்றமையானது, தொழில்துறை தரத்திற்கும் அப்பாற் செல்வதற்கான அதன் நோக்கத்தை கோடிட்டுக் காட்டுகிறது. புத்தாக்கமான பிரான்ஸை தழுவிய உற்பத்தி முறைகள் மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறை மூலம், தனது வாடிக்கையாளர்கள் மற்றும் சந்தைகளில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் மின்சக்தி தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்வதை Socomec உறுதி செய்கிறது.

இந்த மூலோபாய விரிவாக்கம் தொடர்பான தனது உற்சாகத்தை வெளிப்படுத்திய, Socomec இன் ஆசியபசுபிக் பிராந்தியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), O'Niel Dissanayake, "புத்தாக்கம் மூலம் அனைத்து சந்தைகளிலும் நிலைபேறான வளர்ச்சியை செலுத்துவதே எமது முக்கியமான இலக்காகும். இலங்கை, அதன் வலுசக்தி மாற்றீடு மற்றும் டிஜிட்டல் மாற்றம் ஆகியவற்றிற்கு மத்தியில் உள்ள நிலையில், நாமும் அதில் பாரிய பங்களிப்பை வழங்கவுள்ளோம்.

தனது பங்குதாரர்கள் ஊடாக நாட்டில் நீண்ட காலமாக Socomec அதன் பிரசன்னத்தைக் கொண்டுள்ள போதிலும், எமது மதிப்புமிக்க பங்காளிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு எமது ஆதரவு வலையமைப்பை வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இந்த தருணத்தை நாம் கருதுகிறோம். எமது உலகளாவிய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம், எமது ஆசிய பசிபிக் மற்றும் இந்திய நிறுவனங்களின் ஊடாக ஐரோப்பிய உற்பத்திகள் மற்றும் தீர்வுகளை இலங்கைக்கு வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம்" என்றார்.

# மக்கள் வங்கி கோடி அதிர்ஷ்டம் 2023 மாபெரும் சீட்டிழுப்பில் கோடீஸ்வர வெற்றியாளர் தெரிவு




'மக்கள் வங்கி பணம் அனுப்பல் சேவை கோடி அதிர்ஷ்டம் 2023' இன் மாபெரும் சீட்டிழுப்பில் ரூபா. 10 மில்லியன், ரூபா. 3 மில்லியன் மற்றும் ரூபா. 2 மில்லியன் பரிசுத் தொகைகளுக்கான வெற்றியாளர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு மக்கள் வங்கியின், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

2023 டிசம்பர் 10 முதல் 2023 டிசம்பர் 31 வரையிலான வாராந்த வெற்றியாளர்களும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான இலட்சாதிபதி;களும் நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமக்கும் தமது குடும்பங்களுக்கும் சிறந்த வாழ்க்கையை கட்டியெழுப்பி, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அயராது உழைக்கும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், பாராட்டுவதற்காகவும் மக்கள் வங்கி 'கோடி அதிர்ஷ்டம் 2023' சீட்டிழுப்பை ஆரம்பித்து.

கிளைவ் பொன்சேகா மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர், அஸ்லாம் ஏ. அஹமத் நிதித் தலைவர், நிபுணிகா விஜயரத்ன பிரதிப் பொது முகாமையாளர் (வங்கி ஆதரவு சேவைகள்), ஈ.ஏ. எம். திஸாநாயக்க பிரதம உள்ளக கணக்காய்வாளர், நாலக விஜயவர்தன சந்தைப்படுத்தல் தலைவர், அருணி லியனகுணவர்தன உதவிப் பொது முகாமையாளர், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், ரேணுகா அருணாச்சலம் பிரதம முகாமையாளர், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், திலினி பெரேரா சிரேஷ்ட முகாமையாளர், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், விபுல வர்ணகுல சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம், நதீஷா தென்னகோன் முகாமையாளர், வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் சுதீர சமரசிங்க – மேல்மாகாண வருமான வரித் திணைக்களத்தின் சிரேஷ்ட மதிப்பீட்டாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# குளோபல் பினான்ஸ் விருது நிகழ்வில் சிறந்த SME வங்கியாக கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியானது, 2024 ஆம் ஆண்டுக்கான குளோபல் பினான்ஸ் விருதுகளில் இலங்கையின் 'சிறந்தSME (சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவு) வங்கியாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவிகள் மற்றும் நலன்களை வழங்கும் வங்கியின் நிலையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.




நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவுக்கு பாரிய கடன் வழங்குபவராக ஏற்கனவே நிதியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி, இந்தத் துறையில் மதிப்புமிக்க குளோபல் பினான்ஸ் விருதை தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் பெற்றுள்ளது.

ஆசியபசிபிக் பிராந்தியத்தில் உள்ள தங்கள் நாடுகளில் சிறந்தSME வங்கிகளாக கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் OCBC சிங்கப்பூர், மேபேங்க் மலேசியா, Sumimoto நிதிக் குழு ஜப்பான், HDFC வங்கி இந்தியா, பிரைம் வங்கி பங்களாதேஷ் மற்றும் Vietcombank வியட்நாம் என்பனவாகும்.

இந்த அண்மைய விருது குறித்து கொமர்ஷல் வங்கியின் தனியார் வங்கிப் பிரிவு பிரதி பொது முகாமையாளர் திலக்ஷன் ஹெட்டிஆரச்சி; கருத்துத் தெரிவிக்கையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிப்பிரிவானது (SME) எமக்கு எப்பொழுதும் முதன்மையான முன்னுரிமையாகும், மேலும் இலங்கையின்SME துறைக்கு கொமர்ஷல் வங்கி மிகப்பெரிய கடனுதவி வழங்குவதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் எங்கள்SME வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து பல நிலைகளில் இணைந்து செயற்படுகிறோம், அவர்களுக்கு அறிவையும் திறனையும் உருவாக்க உதவுவதுடன் மற்றும் வலையமைப்பு வசதிகளை வழங்குவதுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான அணுகலை எளிதாக்குகிறோம்.

SME துறையினரை ஆதரிப்பதற்காக கொமர்ஷல் வங்கியின் மிக சமீபத்திய நிதியல்லாத முன்முயற்சிகளாக ஆரம்பித்து வைக்கப்பட்டவையே 'கொமர்ஷல் பேங்க் LEAP Global Linker மற்றும் LEAP Global Linker ஆகியன. இவை இரண்டும் வர்த்தக முயற்சிகளை உலகளாவிய சந்தைகளில் ஊடுருவ உதவுவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக, கொமர்ஷல் வங்கிSME வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேக சங்கமொன்றைக் (Club) கொண்டுள்ளது. நாட்டிலேயே முதன்முறையாக, கொமர்ஷல் வங்கி Biz Club ஆனதுபுதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவதற்காகSME யினரை ஒன்றிணைத்து அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு அப்பால் கல்வி, வலையமைப்பாக்கம் மற்றும் தொடர்புடைய அதிகாரசபைகளின் நிபுணர் ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குகிறது.

# தனது Pre–owned சொகுசு வாகனங்களுக்கு CARPITAL ஆலோசனை சேவையை அறிமுகப்படுத்தும் DIMO

இலங்கையின் வாகனத் துறையில் நீண்ட கால முன்னோடி நிறுவனமாகத் திகழும் DIMO, தனது DIMO CERTIFIED மூலம், பயன்படுத்தப்பட்ட (Preowned) ஆடம்பர கார்களை கொள்வனவு செய்பவர்களுக்கும் விற்பனை செய்பவர்களுக்கும் CARPITAL ஆலோசனை சேவையை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. CARPITAL மூலம், கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் தங்கள் Preowned சொகுசு கார்களுக்கு சரியான முதலீட்டு முடிவை எடுக்க வழிகாட்டப்படுகிறது.



இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அதிகரிக்கும் வாகன சந்தைப் பெறுமதி ஆகியன, Preowned சொகுசு கார் துறையில் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியுள்ளதோடு, CARPITAL மூலம் ஆபத்தற்ற, 100% வெளிப்படையான பரிவர்த்தனைகள் மூலம் வாகனம் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யும் செயன்முறை முழுவதும், நிபுணர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.

DIMO நிறுவனத்தின் பயணிகள் வாகன விற்பனைப் பிரிவின் பொது முகாமையாளர் தரங்க குணவர்தன இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "Preowned சொகுசு வாகனச் சந்தையில், முடிவெடுக்கும் விடயம் தொடர்பில், ஒரு தனித்துவமான பங்களிப்பை CARPITAL வழங்குகிறது. அனுபவம் வாய்ந்த சொகுசு வாகன விற்பனை நிபுணர்களான எமது CARPITAL ஆலோசகர்கள், சொகுசு வாகனங்களின் சந்தை மதிப்புகள் அதிகரித்துள்ள முக்கியமான காலங்களில், எமது வாடிக்கையாளர்கள் Preowned சொகுசு வாகனங்களில் மேற்கொள்ளும் முதலீடுகளை அதிக இலாபம் ஈட்டுவதற்காகவும், உயர் பலன்களை பெறுவததனை நோக்காகக் கொண்டு, உரிய ஆலோசனை சேவைகளை வழங்குகின்றனர்." என்றார்.

Preowned சொகுசு வாகனச் சந்தையில், மறைக்கப்பட்ட பழுதுபார்ப்புச் செலவுகளைக் கண்டறிதல், முறையாக முன்னெடுக்கப்படாத பராமரிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்பதோடு, மறைக்கப்பட்ட விபத்துத் தகவல்கள், தவறான வாகன ஆவணங்கள் தொடர்பான சட்டச் சிக்கல்கள் போன்றன, வாகனத்தின் பாதுகாப்பு மற்றும் மீள்விற்பனையின் போது, அதன் விற்பனைப் பெறுமதியில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

CARPITAL ஆனது, MercedesBenz, Jeep, Audi, BMW, Land Rover, Range Rover போன்ற முன்னணி ஆடம்பர வர்த்தகநாமங்களின் உண்மையான கொள்வனவாளர்களுக்காக, அவை தொடர்பான விரிவான தகவல்களை பெறக் கூடிய தளத்தை அணுகுவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது. இது, வாகனங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் செயன்முறையை ஒழுங்குபடுத்துகிறது.

# பதுளை ஸ்ரீ தம்மானந்தா வித்தியாலய உள்ளக வீதியை மேம்படுத்த உதவிய சியபத பினான்ஸ்



பதுளை ஸ்ரீ தம்மானந்தா மகா வித்தியாலயத்தின் நீண்டகாலத் தேவையாக இருந்த இந்த உள் அணுகல் வீதியை அமைப்பதற்கு, சியபத பினான்ஸ் பிஎல்சி அண்மையில் நிதியுதவியை வழங்கியது.

சியபத பினான்ஸ் பிஎல்சியின் அதிகாரிகளின் அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பொறுப்புணர்வுமிக்க இந்த முன்முயற்சியின் ஒரு அங்கமாக, நன்கொடையாக காசோலையை பாடசாலை அதிபர் திருமதி வி.ஏ.சி நந்தனியிடம், பதுளை சியபத பினான்ஸ் பிஎல்சி கிளை முகாமையாளர் தினுச ராஜமந்திரி கையளித்தார். சிரேஸ்ட பிராந்திய முகாமையாளர் மஞ்சுள ஜயதிலக்க, பிராந்திய முகாமையாளர் ரெங்கன் பாலகிருஸ்ணன், பதுளை சியபத பினான்ஸ் தங்க நிதியுதவிப் பொறுப்பாளர் கௌசிக குணசேகர மற்றும் பதுளை ஸ்ரீ தம்மானந்தா மகா வித்தியாலயத்தின் உப அதிபர் ஏ.எம். நந்தசேன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வடக்கின் சமர்: யாழ். மத்திக்கு எதிராக பரியோவான் அணிக்கு வெற்றி வாய்ப்பு

வடக்கின் சமர் மாபெரும் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி ஒரு விக்கெட் மாத்திரம் கைவசம் இருக்க 69 ஓட்டங்களால் மாத்திரமே முன்னிலை பெற்றிருப்பதால் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (08) முதல் இன்னிங்ஸில் 71 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி அணி ஆட்ட நேர முடிவின்போது 140 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்துள்ளது.



நிஷான்தன் அஜேய் அதிகபட்சமாக 23 ஓட்டங்களை பெற்றார். சிறப்பாக பந்துவீசிய கிருபானந்தன் கஜகர்ணன் மற்றும் ஜெயசந்திரன் அஷ்னத் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ். மத்திய கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 157 ஓட்டங்களையே பெற்ற நிலையில் நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த பரியோவான் கல்லூரி அணி 70.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களை பெற்றது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய நேசகுமார் ஜேசியல் 99 பந்துகளில் 52 ஓட்டங்களை பெற்றதோடு சச்சின் கணபதி 40 ஓட்டங்களை சேர்த்தார். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி சார்பில் தகுதாஷ் அபிலாஷ் மற்றும் முரளி தீசன் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஆட்டத்தின் கடைசி நாளான இன்று (09) யாழ். மத்திய கல்லூரி அணி எதிரணிக்கு சவாலான இலக்கொன்றை நிர்ணயிப்பதற்கு கடைசி ஒரு விக்கெட் மாத்திரமே இருக்கும் நிலையில் போராட வேண்டி உள்ளது.

மறுபுறம் இலகுவாக வெற்றி இலக்கொன்றை பெறுவதற்கு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கு இன்னும் ஒரு விக்கெட்டை வீழ்த்தினால் போதுமானதாகும்.

பங்களாதேஷுக்கு எதிரான

# தொடரை தீர்மானிக்கும் இன்றைய போட்டியில் களமிறங்கும் வனிந்து




இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று சில்ஹட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர் 1–1 என சமநிலை பெற்றிருக்கும் நிலையில் இன்றைய போட்டியில் வெற்றிபெறும் அணி தொடரை கைப்பற்றும். இதில், இரண்டு போட்டித் தடைக்குப் பின்னர் இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க களமிறங்கவுள்ளமை அணிக்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.


இரண்டாவது டி20 போட்டியில் இலங்கை அணி துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டு துறைகளிலும் சோபிக்கத் தவறிய நிலையில் இன்றைய ஆட்டத்தில் அணியில் மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக முதல் இரு போட்டிகளிலும் சோபிக்கத் தவறிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ நீக்கப்பட்டு நிரோஷன் திக்வெல்ல அழைக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் இரண்டாவது டி20 போட்டியில் இலங்கை மூன்று வேகப்பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியபோதும் ஒருவரும் விக்கெட் வீழ்த்த தவறினர். எனவே அவர்களில் ஒருவருக்கு பதிலே வனிந்து ஹசரங்க இன்றைய தினத்தில் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேல் இன்றைய ஆட்டம் பகல் போட்டியாக இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கே ஆரம்பமாகவுள்ளது. எனவே முதல் இரு போட்டிகளிலும் பனி காரணமாக இரண்டாவது பந்துவீசும் அணிக்கு இருந்த சிரமம் இந்தப் போட்டியில் இருக்காது.

# எம்.எச்.370 மர்மத்திற்கு 10 ஆண்டுகள் நிறைவு





உலகின் மிகப்பெரிய விமானப் போக்குவரத்து மர்மங்களில் ஒன்றாக மாறியுள்ளது மலேஷிய ஏர்லைன் எம்.எச்.370 விமானம் காணாமல்போய் நேற்றுடன் (08) 10 ஆண்டுகள் நிறைவடைந்தன.

2014 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி கோலாலம்பூர் சர்வதேச விமானநிலையத்தில் இருந்து பீஜிங் நகரை நோக்கி 239 பயணிகளுடன் புறப்பட்ட இந்த விமானம் நடுவானில் ராடர் திரையில் இருந்து மறைந்தது.

தென் இந்திய பெருங்கடலின் 46,332 சதுர மைல் பகுதியை உள்ளடக்கிய விமானப் போக்குவரத்து வரலாற்றில் மிகப்பெரிய தேடுதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டபோதும் அந்த விமானத்தின் சில துண்டுகளை மாத்திரமே கண்டுபிடிக்க முடிந்தது.

தேடுதல் நடவடிக்கை 2017 ஜனவரி மாதம் இடைநிறுத்தப்பட்டது. எனினும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், உறவினர்களுக்கு என்ன ஆனது என்ற கேள்விக்கு இன்னும் பதில் தேடி வருகின்றனர்.

# நேட்டோ அமைப்பில் இணைந்தது சுவீடன்



நேட்டோ அமைப்பின் 32 ஆவது உறுப்பு நாடாக சுவீடன் உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து இந்த இராணுவ கூட்டமைப்பில் இணைய இரண்டு ஆண்டுகளுக்கு முன் விண்ணப்பித்த சுவீடன் அந்த அமைப்பில் இணைவதற்கான ஆவணத்தை வொஷிங்டனில் நேற்று முன்தினம் (07) பெற்றுக் கொண்டது.

முன்னெப்போதும் இல்லாத அளவு நேட்டோ தற்போது வலுப்பெற்றுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

ஏற்கனவே கடந்த ஆண்டு பின்லாந்து நேட்டோவில் இணைந்த நிலையில் அந்த நாடு மற்றும் சுவீடன் ரஷ்யாவுடன் 1,340 கிலோ மீற்றர் எல்லையை பகிர்ந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# 200க்கும் அதிகமான மாணவர்கள் கடத்தல்



வடமேற்கு நைஜீரியாவில் பாடசலை ஒன்றை சுற்றிவளைத்திருக்கும் துப்பாக்கிதாரிகள் அங்கிருந்து 200க்கும் அதிகமான மாணவர்களை கடத்திச் சென்றுள்ளனர்.

குரிகா பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை (07) இந்தக் கடத்தல் இடம்பெற்றதை கடுனா மாநில உள்ளூர் அரச அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். கடத்திச் செல்லப்பட்ட 25 மாணவர்கள் விடு திரும்பியபோதும் தொடர்ந்தும் 275 பேரை காணவில்லை என்று பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இவர்களை மீட்பதற்கு தேடுதல் மற்றும் மீட்புக் குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தலில் தப்பிய ஆசிரியர் ஒருவர் கூறியதாவது, சிறுவர்களை மீட்பதற்கு உள்ளூர் மக்கள் முயன்றார்கள், ஆனால் ஆயுததாரிகள் அதனை முறியடித்ததோடு இதில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றார்.

ஆபிரிக்காவில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடான நைஜீரியாவில் பணத்திற்காக கடத்தல்கள் இடம்பெறுவது வழக்கமானதாகும். கடந்த காலங்களிலும் இவ்வாறு பாடசாலை மற்றும் கல்லூரிகளில் கடத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

## சர்வதேச செய்திகள்

# உதவி வழங்க காசாவில் தற்காலிக துறைமுகம் அமைக்கிறது அமெரிக்கா

## போர் நிறுத்தப் பேச்சில் முன்னேற்றம் இல்லை

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடித்து போர் நிறுத்தம் தொடர்பான எதிர்பார்ப்பும் குறைந்து வரும் நிலையில், அங்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா தற்காலிக துறைமுகம் ஒன்றை அமைக்கவுள்ளது.

காசாவின் மத்தியதரைக் கடற்கரையில் கட்டப்படவிருக்கும் இந்த தற்காலிக துறைமுகத்தின் மூலம் கடல் வழியாக காசாவுக்கு உதவிகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அந்நாட்டு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (07) ஆற்றிய வருடாந்த உரையிலேயே இதனைத் தெரிவித்தார். காசாவுக்கான உதவிகளை இஸ்ரேல் முடக்கி, அங்கு பஞ்சம் ஒன்று ஏற்படும் சூழல் அதிகரித்திருக்கும் நிலையிலேயே பைடனின் உரை இடம்பெற்றுள்ளது.

இதில் ஹமாஸுக்கு எதிரான போரில் உதவி வழங்கலை பேரம்பேசும் உத்தியாக பயனப்படுத்தக் கூடாது என்று இஸ்ரேலை பைடன் எச்சரித்தார்.

காசா போர் ஆறு மாதங்களை தொட்டிருக்கும் நிலையில், அமெரிக்காவில் தேசிய அளவில் முக்கியம் வாய்ந்த இந்த வருடாந்த உரையில் பைடன் இஸ்ரேலுக்கு இதுவரை இல்லாத கடுமையான வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தியுள்ளார்.

'மனிதாபிமான உதவி இரண்டாம் பட்சமானது அல்லது ஒரு பேரம்பேசும் உத்தியாக இருக்கக் கூடாது என்று இஸ்ரேலிய தலைமைகளுக்கு நான் கூறிக்கொள்கிறேன்' என்றார் பைடன். 'அப்பாவி மக்களை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தினர்.

இந்நிலையில் தற்காலி துறைமுகம் ஒன்றை அமைப்பதன் மூலம் காசாவுக்கு பாரிய கப்பல்களில் உணவு, நீர், மருந்து மற்றும் தற்காலிக முகாம்களை வழங்க முடியுமாக இருக்கும் என்று பைடன் சுட்டிக்காட்டியுள்ளர்.

காசாவில் மனிதாபிமான நெருக்கடி மோசமடைந்திருக்கும் சூழலிலும் இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு நிலைப்பாட்டை வகிப்பது பைடன் நிர்வாகத்திற்கு உள்நாட்டிலும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இந்தத் திட்டத்தில் அமெரிக்கப் படைகள் அங்கு அனுப்பப்பட மாட்டாது என்றும் பைடன் குறிப்பிட்டார்.

அமெரிக்கப் படையினர் கடற்கரைக்கு அப்பால் நிலைகொள்ளும் அதே நேரம் கூட்டணியைச் சேர்ந்த தரப்பினர் துறைமுகத்தில் இருந்து செயற்படவுள்ளனர். இந்தத் திட்டத்தில் கடல்வழி உதவிகளுக்கான வாயிலாக சைப்ரஸும் செயற்படவுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து பேசுவதற்கும் பார்வையிடுவதற்கும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வொன் டர் லெயன் நேற்று மத்தியதரைக்கடல் தீவு நாடான சைப்ரஸை சென்றடைந்தார்.

### அமெரிக்காவின் கோபம்

இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடாக இருக்கும் அமெரிக்கா ஒரு வாரத்துக்குள் மூன்றாவது முறையாகவும் காசாவுக்கு வானில் இருந்து நேற்று முன்தினம் (07) உதவிகளை வீசியது. இதில் ஜோர்தான், பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து நாடுகளும் பங்கேற்றிருந்தன.

காசாவுக்கு வீதி வழியாக உதவிகள் செல்வது முடக்கப்பட்டிருக்கும் நிலையில், வானில் இருந்து உதவிகள் போடப்படுவதை பலஸ்தீன பகுதிகளுக்கான ஐ.நா உதவி இணைப்பாளர் சிக்ரித் கான் வரவேற்றபோதும், தரைவழியான விநியோகமே தொடர்ந்து உகந்த தீர்வாக உள்ளது என்றார்.

எனினும் திட்டமிடப்பட்டுள்ள துறைமுகம் வழியான உதவி விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு பல வாரங்கள் எடுத்துக்கொள்ளக் கூடும் என்று குறிப்பிட்ட அமெரிக்க அதிகாரிகள் அதற்கு இஸ்ரேலுக்காக காத்திருக்காது என்றும் கூறினார்கள்.

காசாவுக்கு உதவிகள் செல்வதை அனுமதிக்கத் தவறியுள்ள இஸ்ரேல் மீது அமெரிக்காவின் கோபம் அதிகரித்து வருவதற்கான சமிக்ஞை ஒன்றாக இது உள்ளது என்று அதிகாரி ஒருவர் கூறியதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



இதில் காசாவில் துறைமுகம் ஒன்றை அமைப்பது புதிய திட்டம் ஒன்று அல்ல என்று பலஸ்தீன தேசிய நிறுவனத்தின் செயலாளர் நாயகம் முஸ்தபா பார்கூதி 'அல் ஜசீரா' தொலைக்காட்சிக்கு குறிப்பிட்டுள்ளார்.

'இங்கிருக்கும் பிரச்சினையை திசைதிருப்பும் மற்றொரு முயற்சியாகவே இதனை பார்க்க வேண்டி இருக்கிறது. தற்போது வடக்கு காசாவில் 700,000 பேர் பட்டினியில் இருப்பதோடு அவர்களுக்கு மற்றும் காசா பகுதிக்கு இஸ்ரேல் மனிதாபிமான உதவிகளை அனுமதிப்பதில்லை' என்று அவர் குறிப்பிட்டார்.



எகிப்துடனான காசாவின் எல்லையில் காசாவுக்கு நுழைவதற்கான பெரும் அளவான உதவிகள் காத்திருப்பதாக குறிப்பிட்ட பார்கூதி 'இந்த முடக்கத்தை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் இஸ்ரேலுக்கு எந்த அழுத்தத்தையும் கொடுப்பதில்லை' என்று சுட்டிக்காட்டினார்.

காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்தவர்கள் 20 ஆக உயர்ந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு கடந்த புதனன்று கூறியிருந்தது. இவர்களில் குறைந்தது பாதிப் பேர் சிறுவர்களாவர்.

தரைவழிப் பாதைகள் இல்லாத நிலையில் வான் வழியாக உதவிகளை போடுவது பஞ்சத்தை தடுக்க உதவாது என்று உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

வடக்கு காசாவின் ஜபலியாவில் உள்ள பாழடைந்த பகுதியில் உணவு விநியோகிக்கும் இடம் ஒன்றுக்கு அருகில் பலஸ்தீனர்கள் ஒன்றுதிரண்டனர். 'உணவை சமைப்பதற்கு இங்கே எரிவாயு இல்லை. மாவு அல்லது அரிசி எதுவும் இல்லை' என்று அந்த இடிபாடுகளுக்கு இடையே காத்திருந்த பசம் அல் ஹவ், ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளார்.

### பேச்சு ஸ்தம்பிதம்

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு கடந்த மூன்று நாட்களுக்கு மேல் கெய்ரோவில் தீவிர பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதும் அந்த முயற்சியில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஹமாஸ் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை கெய்ரோவில் இருந்து வெளியேறியதோடு, போர் நிறுத்த உடன்படிக்கையை எட்டும் பொறுப்பு அந்த பலஸ்தீன போராளிகளுக்கு இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

நாளை அல்லது நாளை மறுதினம் ஆரம்பமாகும் ரமழான் மாதத்தை ஒட்டி 40 நாள் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தொடர்பில் எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்தில் கெய்ரோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் எட்டப்படாததற்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன. இஸ்ரேல் பங்கேற்காத நிலையில் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தை மீண்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் என்று எகிப்து பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் அமெரிக்காவின் இவ்வாறான கருத்துகள் தவறாக வழிநடத்துவதாக உள்ளது என்று ஹமாஸ் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். போரை முடிவுக்குக் கொண்டுவரும் நடைமுறை ஒன்றை உள்ளடக்கிய போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றையே ஹமாஸ் வலியுறுத்தி வருகிறது.

தலைவர்களுடன் பேசுவதற்காக கெய்ரோவில் இருந்து வெளியேறுவதாக ஹமாஸ் பிரதிநிதிகள் முன்னதாக குறிப்பிட்டிருந்தனர். போர் நிறுத்த உடன்படிக்கை உட்பட முயற்சிகளை இஸ்ரேல் முறியடித்து வருவாக ஹமாஸ் மூத்த அதிகாரி சமி அபூ சுஹ்ரி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு காசாவில் தனது இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுப்பதை கடந்த வியாழக்கிழமையும் வலியுறுத்தி இருந்தார்.

ஹமாஸை ஒழிப்பதை இலக்காக கொண்டிருப்பதாகவும் எந்த ஒரு போர் நிறுத்தமும் தற்காலிகமானதாக இருக்கும் என்றும் இஸ்ரேல் முன்னதாக கூறியிருந்தது. அதேபோன்று காசாவில் பிடித்து வைக்கப்பட்டு தொடர்ந்து உயிருடன் இருக்கும் பணயக்கைதிகளின் பட்டியலை இஸ்ரேல் கேட்டு வருகிறது.

'எமது பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேல் என்ன வேண்டுமானாலும் செய்யும் என்பதை கூற வேண்டியதில்லை. துரதிருஷ்டவசமாக, தமது பிடியில் இருப்பவர்கள், யார் உயிருடன் இருக்கிறாரர்கள் என்பதை கூறுவதை தற்போது ஹமாஸே மருத்து வருகிறது' என்று இஸ்ரேல் அரச பேச்சாளர் டேவிட் மன்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து நீடிப்பதோடு அங்கு 24 மணி நேரத்தில் மேலும் 78 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 30,878 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோன்று கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 104 பேர் காயமடைந்திருக்கும் சூழலில் காசாவில் காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 72,402 ஆக அதிகரித்திருப்பதாக அந்த அமைச்சு டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் சுமார் 9,000 பெண்கள் கொல்லப்பட்டிருப்பதோடு சராசரியாக நாளொன்றுக்கு 63 பெண்கள் பலியாவதாகவும் இதில் 37 பேர் தாய்மார்கள் என்றும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதில் நேற்றுக் காலை தெற்கு நகரான ரபாவில் இடம்பெற்ற வான் தாக்குதலில் ஒரே குடும்பத்தில் ஐந்து பேர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேநேரம் ரபாவில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் கூடாரங்கள் மீது நடத்தப்பட்டிருக்கும் பீராங்கி தாக்குதல்களில் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.